Yarl Vision

# யாழ்விஷனின்
# கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை







## முதலாவது ஆண்டு நிறைவுவிழா

## 17.11.2013

No.19, Konavalai Lane,
Kokuvil East, Kokuvil,
Jaffna, Sri Lanka

☎ : 0212212255, 0217200719
✉ : info@yarlvision.org
www.yarlvision

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனை சரண் அடைந்தால்
அதிகவரம் பெறலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விஷனின்
# கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையின்
# முதலாவது ஆண்டு விழா
# 17.11.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ணா அறநெறிக் கீதம்

நிறைவாய் இன்பம் முறையாய்ப் பெறவே
கிருஸ்ணா அறநெறி வழிகாட்டிடுமே
கலையால் உயர்ந்து அறம் வாழ்ந்திடவே
தொலை நோக்குடனறிவொளி யூட்டிடுமே

கற்கும் மாணவர் சிறப்புறவே - நம்
கிருஸ்ணா அறநெறி வாழியவே

குருமார் பெரியோர் மதியால் மொழிந்த
அறவாழ்வதனை நெறியாய்த் தொடர
குபேரர் ஏழை குலமதபேத
கறைகளைக் களைந்து பல் கலைகளை மதித்து (நிறைவாய்)

அறவொளி அகத்தில் விதைத்திடும் ஆசான்
அன்புடன் எமையணைத் தறிவொளி பரப்பி
இறையருள் புகழொடு இனியநல் வாழ்வில்
இணைந்திட எமக்கு நற்துணையென வளர்ந்து (நிறைவாய்)

அறிவியல் அறநெறி பண்ணிசை யோகா
மிருதங்கம் கைப்பணி சித்திரமும்
வயலின் நடனம் கணினித் திறனும்
மகிழ்வாய்ப் பயில மனதைக் கவர்ந்து (நிறைவாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

## பெரிய புராணம்

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கங்கள்...

கிருஸ்ணா அறநெறி நிர்வாகிகள்
திரு.திருமதி சுசீந்திரன்

"சவால்களை வென்று சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கி, அன்பும், ஆற்றலும், ஆன்மீகமும் மிக்க மாணவர் பரம்பரையை வெளியுலகுக்குக் கொண்டு வருதல்" இவ் அறநெறிப் பாடசாலையின் நோக்காகும்.

* இந்து சமயம், பண்ணிசை, யோகாசனம், சித்திரம், கலை வகுப்புகள் போன்ற பயிற்சிகளை கற்பித்தல்.

* மாணவர்களுக்கு பயிற்சி பட்டறை, விசேஷ வகுப்புகள் நடத்தி அவர்களைக் கொண்டே சுயகற்றல் விருத்தியை ஏற்படுத்தல்.

* வசதி குறைந்த மாணவர்களுக்கு தேவைக்கேற்ப விசேஷ வகுப்புக்கள் அமைத்துக் கொடுத்தல், மேற்படிப்புக்கான நிதி உதவி செய்தல்.

* பாடசாலையில் சமய சம்பந்தமான விடயங்களில் ஈடுபடுதல். முக்கிய ஆலயங்களுக்கு மாணவர்களைக் கூட்டிச் சென்று ஆலய அமைப்புக்கள், ஆலய வழிபாட்டு முறைகளை அறிதல்.


* எமது கணனி மையத்தில் எமது மாணவர்களை கணனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கடந்த கால நிகழ்வுகள்






18.11.2012 சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நல்லை திருஞானசம்பந்த ஆதின இரண்டாவது குரு மகா சன்னிதான முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரியர் அவர்களால் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதோடு. சிவஸ்ரீ.கு.குமாரக்குருக்கள் அவர்களால் கிருஸ்ணர் சிலையும் திறந்துவைக்கப்பட்டது. இதில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. மா.அனந்தலெட்சுமி அவர்களும், ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசனும் வாழ்த்துச் செய்தி கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை - 5.12.2012



அறநெறிப் பாடசாலை
பட்டிப்பொங்கல் விழா - 15.01.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்
குருபரம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

021 222 2870

29/09/2013.

## அருளாசிச் செய்தி

அன்புக்குரியவருக்கு!

கொக்குவில் யாழ் விஷனின் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை இன்று தனது ஓராவது ஆண்டை அடைந்திருப்பதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இப்பிரதேசத்தில் வாழும் மாணவர்களுக்கு இலவசக் கலை கல்வியை வழங்கி ஓராண்டை அடைந்திருக்கும் இரு பாடசாலை, மாணவர்களிடையே எங்கள் சமயநெறிகளை ஒழுங்குபடுத்துதல், நல்ல சிந்தனையுடன் செயற்படல், உடல்நல ஒழுக்கப் பண்புகளைப் பேணுதல், புரிந்துணர்வுடன் செயலாற்றல் போன்ற நற்கருமங்களை ஆற்றி வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தியுள்ளமை அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது. இப்பணியைச் செய்யும் குடும்பத்தினரையும் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம். பல ஆண்டுகள் பணியாற்ற இறையருளை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org


## ஆசிச்செய்தி


**இறைபணியில், பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா**
வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.
021 222 3447




யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை ஓராண்டினை நிறைவுசெய்வது மிகவும் சந்தோசத்திற்குரிய விடயம். சிறுவர்களுக்கு நல்லொழுக்கம், கலாசாரம், பண்ணிசை, கலைகள் எனப்பல விடயங்களை வழங்குகின்ற இடமாக இப்பாடசாலை திகழ்கிறது. அதுமட்டுமல்ல சமூகப் பணிகளையும் ஆற்றி வருகின்றது.

14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தொழிலுக்கும் மேம்பாட்டுக்கும் உதவி வருகின்றது. இப்பாடசாலையின் பணிகள் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெறவும் இம்மலர் சிறப்பாக வெளிவரவும் இறையாசி வேண்டி, குருவின் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகதிர்காமம்
பதிவு இல. HA/5/JA/984

பதிவு இல: HA/5/JA/984 GUHA MAYAM

**SRI BALAKATHIRGAMA THEVASTHANAM**

110/13, SADDANATHAR TEMPLE WEST ROAD, NALLUR, SRI LANKA.

# ஆசிச்செய்தி

**கு. குமாரக்குருக்கள்**



யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தியாகும் இந்நன்னாளிலே அதன் செயற்பாடுகளையும் சேவைகளையும் நினைவு கூர்வதுடன், பாராட்டி வாழ்த்துவதற்கும் கடமைப்பாடு உள்ளவனாக இருக்கின்றேன்.

யாழ் விஷன் ஸ்தாபனம் சமூக சேவைக்காகவும் மாணவர்களின் முன்னேற்றத்தையும் நலத்தையும் வளர்ப்பது மட்டுமன்றி; வசதியற்ற மாணவர்கள் உயர்கல்விக்கும் வழிவகுக்கும் நோக்குடன் இலண்டனில் வாழ்ந்துவரும் திரு. சுசீந்திரன், திருமதி சுசீந்திரன் தம்பதிகளின் தார்மீக நோக்கில் உருவாக்கப்பட்ட ஸ்தாபனம்தான் இந்த அறநெறிப் பாடசாலை.

அத்துடன் நாட்டின் அவசிய தேவையையும் பின்தங்கி இருக்கும் பிள்ளைகளின் ஆர்வத்துக்கேற்ப பல துறைகளிலும் கல்வி மூலம் முன்னேறச் செய்வதே இவர்களின் நோக்கமாகும். மேல்நாட்டில் வாழுகின்ற இவர்கள் தமது தாய் நாடாகிய ஸ்ரீ லங்காவில் தம் தாய் தந்தையர் வாழ்விடமாகிய இல்லத்தில் இச்செயற்பாட்டினை ஆர்வத்துடனும் சந்தோசமாகவும் சொந்த முயற்சியில் செயற்படுவது பெருமைக்குரியதாகவும் எமக்கு முன்மாதிரியாகவும் இவர்கள் வாழும் சேவை நோக்கைச் சிந்திக்கும்போது எம்மையும் சேவை நோக்கை ஊக்குவிக்கும் திரிதூண்டியாகச் செயற்படவைக்கிறது. இதுமட்டுமன்றி வாழ்வாதாரம் குறைவான குடும்பங்களுக்கு தொழில் ஊக்கம் ஏற்படுத்தியும் உபகரணங்கள் வழங்கியும் உதவிபுரிந்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய தரிசனம் - 19.01.2013





பொற்பதிப் பிள்ளையார் ஆலய தரிசனம் - 09.02.2013





திருவள்ளுவர் குருபூசை
நல்லூர் நாவலர் மணிமண்டபம் - 02.03.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற "கண்ணப்ப நாயனார் நாடகம்"



நகுலேஸ்வரர் ஆலய தரிசனம் - 12.04.2013





கீரிமலை சுற்றுலா - 12.04.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராமஜெயம்

**Arulvalar Sri Sunthara Aanchaneyar Kovil**

**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**





Regd. No : HA/5/JA/934 T.P: 021 2223648

Sivasri R. Senthareswara Kurukkal
Governing Authority & Chief Priest

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்

MARUTHANARMADAM, INUVIL, CHUNNAKAM, JAFFNA, SRI LANKA.

# ஆசியுரை

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றார் தமிழ் மூதாட்டி ஔவையார். மனிதப் பிறவியானது பிறப்புக்கள் அனைத்திலும் மேலானது. பகுத்தறியும் பாங்கினால் தன்னை மேம்படுத்திக்கொள்ளும் வல்லமை மனிதனிற்கு மட்டுமே உண்டு. இப்பூமியில் பிறந்தவர் படித்தவர், படிக்காதவர், இறைபக்தியுள்ளவர், இல்லாதவர், பணம் படைத்தவர், பணம் இல்லாதவர், குருடு, செவிடு, குட்டை, நெட்டை இப்படியாக இறைவன் படைப்பில் நாம் பார்க்கக்கூடியதாக உள்ளது.

இவற்றுள் தர்மம் செய்வார்கள் பெரியோர்கள் என்ற ஆன்றோர்கள் கூற்றில் சொல்லிலும் பணம் கொடுப்பதிலும் பார்க்க ஒருவரிற்கு அறிவு (கல்வி புகட்டல்) கொடுத்தல் மேலான செல்வமாகக் கூறப்படுகிறது. அப்படியான ஓர் நற்காரியத்தினை யாழ் விஷன் என்ற நல்ல நாமத்தைத் தாங்கி குழந்தைகளிற்கு அறிவு ஊட்டும் கல்விச்சாலையினை நிறுவி சேவை செய்கின்றார்கள்.

இந்நிறுவனத்தை நிறுவிய லண்டன் வர்த்தகப் பிரமுகரும் சமூக சேவையாளருமாகிய சுசீந்திரன் அருணகுமாரி குடும்பத்தினர் தமது தொழிலின் நிமிர்த்தம் அன்னிய தேசம் சென்று வாழ்ந்தாலும்; தாம் பிறந்த நாடு தம்முடைய மண் என்கின்ற நிலையில் இங்கு அளப்பரிய பணிகளைச் செய்கின்றார்கள்.

இன்று இந்த நிறுவனம் நிறுவப்பட்டு ஒரு வருட பூர்த்தி விழா வினைக் கொண்டாடுகின்றார்கள். இங்கு கல்வி கற்கும் மாணவ, மாணவி கள் தமிழ் பண்பாட்டிற்கு அமைய சீருடை தாங்கி ஒழுக்க சீலர்களாகவும் நேரம் தவறாதவர்களாகவும் செயல்களை ஆற்றுவதோடு; சமயப் பண்டிகையில் கலை, கலாசாரம், இசை, நவீன விஞ்ஞான பாடங்களை நவீன தேவை அறிந்து கற்பிக்கச் செய்கின்றார்கள். இவர்களின் நற்செயல் நல்லபடி இனிது நிறைவேற நல்ல எண்ணம் நிறைவுறவும் எல்லாம் வல்ல ஆஞ்சநேயப் பெருமானைப் பணிந்து போற்றி எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*"Ammanai Saran Addeinthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL:* 0208 - *810 0835*
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*
www.ammanealing.org Email: info@ammanealing.org

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr. K Sarvananthan

**Asst Treasurer**
Mr. S Ragunathan

**Elected Comm. Member**
Mr. P Kanapathippillai

**Committee Members**
Mr.J.A.Rajakariar
Mr.S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Premachandra

**Secretary**
Dr. V. Paramanathan

Mr. S. Abayalingam
Mr. R. Kanesharajah
Mr. Pon Theivendram
Mr. T. Thevaraajan
Mr.. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Accountants**
TAMSONS
177, Kingsley Road
TW3 4AS. Hounslow,
Middlesex

21/10/2013

நமது தாய் நாட்டில் Yarl Vision செய்துவரும் சேவை மிகவும் பாராட்ட வேண்டிய விடயம். இவர்களின் தன்னலமற்ற சேவையை பலர் பேசவும், பலர் எழுதவும், பலர் புகழ் உரை சூடவும் கேட்டிருக்கின்றேன்.

இவர்களின் இந்த இனம் கண்டு குறிப்பு அறிந்து செய்யும் தொண்டு உரியவர்களுக்கு உரிய வேளையில் கிடைப்பதுதான் முக்கியம். இவர்கள் செய்யும் உதவியால் எத்தனையோ சிறுவர்கள், சிறுமிகள், முதியோர்களின் வாழ்க்கைச் சுமை குறைந்து இருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

திரு. திருமதி. சுசீந்திரன் அவர்களின் கடும் உழைப்பும், சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் மனத்தைரியமும் என்னை மிகவும் கவர்ந்து இருக்கின்றது. இவர்களின் சிந்தனைகள், கனவுகள் நோக்கங்கள் அனைத்தும் நமது நாட்டு மக்களின் வளர்ச்சியையும் அவர்களின் வரும்காலத்தையும் மையமாகக் கொண்டு இருப்பது பாராட்டாமல் இருக்க முடியாது.

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் இலங்கையில் 15 இல்லங்களைப் பராமரித்து வருகின்றது. இதுவரைக்கும் 2 million sterling pounds நமது தாய் நாட்டிற்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள், மலையக மக்களை மையமாக வைத்து உதவிசெய்து வருகின்றது என்பதை தெரிவிப்பதில் பெருமைப்படுகின்றேன்.

**" தொண்டுகள் தொடரட்டும், தொப்புக்கொடி உறவுகளின் வாழ்க்கைத்தரம் உயரட்டும் "**

வணக்கம்.

செ. இராமச்சந்திரன்
தலைவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரிக்குளம் பிள்ளையார் தேர்த்திருவிழா - 14.04.2013



## திருநாவுக்கரசர் குருபூசை தின வரவேற்பு நடனம் - 04.05.2013





## திருஞானசம்பந்தர் குருபூசை தினம் - 01.06.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிப் பாடசாலையில்
சரஸ்வதி சிலை திறப்புவிழா - 16.06.2013



மாணிக்கவாசகர் குருபூசை தினம் - 14.07.2013



சாயி துர்க்காதேவி ஆலய தரிசனம் - 17.07.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHREE GHANAPATY



# TEMPLE

**சிவஸ்ரீ நா. விக்னேஸ்வரக் குருக்கள்**
பிரதம குரு, லண்டன் விம்பிள்டன்,
பிள்ளையார் கோவில்.

அறம் என்பது எல்லாத் திசைகளையும் மிளிரச் செய்கிறது. எம்மில் இடைவிடாது உழைத்து, செல்வம் சேர்த்து மகிழ்வது ஒரு ரகம். ஏழு தலைமுறைக்கும் இந்த மனித வாழ்வு நிலைக்கும்வரைக்கும் மேற்கண்டவை மனமகிழ்வைத் தரக்கூடும். ஆனால் இறக்கும்போதும் அதன் பிற்பாடு ஏற்படும் பிறவிகளுக்கும் என்றும் மகிழ்வை தருவது தர்ம கைங்கரியம் ஆகும். அதுமட்டுமன்றி பிறவாகலம் அருள்வதும், தர்மநெறி மட்டுமே. அது தவிர செல்வம் இருந்தால் மட்டும் போதாது அதைக் கொடுப்பதற்கு, தர்ம காரியம் செய்வதற்கு பெருமனம் வேண்டும். இவ்வுலகில் அப்படிப்பட்டவர்கள் இன்னும் வாழ்வதினால் தான் மழை பொழிகிறது. இயற்கை வாழ்கிறது நலிந்த மனித இனம் வாழ்கிறது.

அத்தகைய தர்ம மனம் கொண்டவர்கள் திருவாளர் சுசீந்திரன் அவர்களும் அவர்தம் பாரியார் அருணகுமாரி அவர்களும் லண்டன் வாழ்க்கையில் மனமகிழ்வை தருகின்ற பல்வேறு நிகழ்வுகள் இருந்தாலும் அதில் நாட்டம் கொள்ளாமல் தாம் பிறந்து வளர்ந்த மண்ணையும் மக்களையும் அரவணைத்து அமுதளித்து கல்வியறிவூட்டி உடல் நலம், உளநலமளித்து தமக்கும் தம் தலைமுறைக்கும் புண்ணியம் சேர்க்கும் மக்கள் சேவையே "மகேசன் சேவை" என்ற அறநெறி அறிந்த தம்பதியினர். அவர்களால் பேருவகையுடன் 2012 இல் நவம்பர் கொக்குவிலில் ஆரம்பிக்கப்பட்ட யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை தனது முதலாவது ஆண்டை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறது. சமய அறிவை வளர்க்கும் சைவசமய வகுப்புக்கள், இசையோடு இறை வணங்கும் பண் இசை வகுப்புக்கள், உடல் உளநலம் வளர்க்கும் யோகா வகுப்புகள் சுயதொழில் வாய்ப்பை நல்கும் கைவேலை, மனம் கவரும் கர்நாடக இசை வகுப்புக்கள், பரத நாட்டிய வகுப்புக்கள் எனப் பலதரப்பட்ட போதனைகள் இடம்பெறுகின்றன. மேற்படி அறிவாலயம் வடம்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி, தமிழுலகம் போற்றும் கல்விப் பேராலயமாக அமையவும், திருவாளர் சுசீந்திரன் திருமதி சுசீந்திரன் அருணகுமாரி அவர்களுடைய தர்ம காரியங்கள் மேலும் வளரவும் எல்லாம்வல்ல விம்பிள்டன் விநாயகப் பெருமான் துணை நிற்க எமது நல்லாசிகள்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில்
## ஆசியுரை

**பிரமஸ்ரீ. சோ. கோகுலதாசசர்மா**
**ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய,**
**சாத்வீக சமய தர்ம வித்யா.**



என் சித்தம் தளர்ந்ததுண்டோ? கலை
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப்பிடித்தது போல் - பகல்
பேச்சும் இரவிற்கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லால் - பிற
வாஞ்சையுண்டோ? வயதங்ஙன மேயிரு
பத்திரண்டாமளவும் - வெள்ளைப்
பண்மகள் காதலைப் பற்றி நின்றேனம்மா

- ஆற்றங்கரை தனிலே

என பாரதியார் கலைமகளை காதலியாய்
பாடித் துதித்துள்ளார். கலைகள் 64 வகை.

அதிமுக்கியமானதாக இசைக்கலை, வாத்தியக்கலை சிறப்புறுகிறது. அவ்வாறான வகையில் மனதை இசைவித்து இறைவனோடு ஐக்கியப் படுத்தும் தொண்டு என்பது மனித சேவையுள் மகத்தான சேவை ஆகும். குழந்தைகள் இறைவனுக்குச் சமனானவர்கள். அவர்கட்கு இசைக் கல்வியையும் கல்வியையும் இலவசமாகக் கொடுக்கும் மனப்பாங்கை சாதாரண சமூகப்பணி என்று கூறமுடியாது. அது சமய, சமூகப் பணியாகும். சமயத்தையும் சமூகத்தையும் வளர்க்கும் யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை மேன்மேலும் சமய,சமூக அறப் பணியை தலை உயர்த்த நாமும் உதவி செய்யவேண்டும். சமயம் வளர, சமூகம் சிறக்க அறநெறி ஓங்க யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை வாழ்க வளமுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா - 21.07.2013




## அறநெறிப் பாடசாலையின்
## பிள்ளையார் சிலை திறப்புவிழா - 25.07.2013







## வல்லிபுர ஆழ்வார் ஆலய தரிசனம் - 28.07.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதி ஆலய தரிசனம் - 28.07.2013





## கயூர்னா கடற்கரை சுற்றுலா - 31.07.2013



## திருக்கேதீஸ்வர ஆலய தரிசனம் - 02.08.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





**நடேசக் குருக்கள் குமரகுருபரக் குருக்கள்**

**பிரதம குரு**

**நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் கோவில்**
**கொக்குவில்**
**யாழ்ப்பாணம்**

# ஆசிச் செய்தி

**ந. குமரகுருபரக் குருக்கள்**

நமது தாய் நாடான இலங்கைத் திருநாட்டிலே சைவமும் தமிழும் தளைத்தோங்கும் யாழ் நகரிலே கொக்குவில் பதியில் அமைந்துள்ள கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையானது 18.11.2012 அன்று முதல் ஆரம்பமாகி திருமதி. சுசீந்திரன் அருணா அவர்களின் தலைமையில் சமயம், பண்ணிசை, யோகாசனம், சித்திரம், வயலின், நடனம், மிருதங்கம், ICT ஆகிய பாடங்கள் மாணவர்களிற்கு இலவசமாக போதிப்பதுடன் நூலகத்தையும் பயனுள்ள வகையில் அமைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறு சமூக சேவையுடன் சமயம், கலை, மொழி ஆகியவற்றில் மாணவர்களை நாளைய சமூகத்திற்கு நல்ல வகையில் பயனுள்ள கல்விமான்களாக வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான சேவையை பாராட்டி கற்புலத்து மனோன்மணி அம்பாளின் ஆசியுடன் எமது ஆசியையும் மனதார தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்
# Arulmigu Sri Ambalavana Veerakatti Vinajakar Alayam

*Potpathy Road,*
*Kokuvil East,*
*Kokuvil,*
*Srilanka.*

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,
இலங்கை.

08.11.2013

## ஆசியுரை

கிரியாகமசாகரம் விநாயக பூஜாதுரந்தரர்
பிரதிஸ்டா சிரோன்மணி
**சிவஸ்ரீ தியாக நடராஜக்குருக்கள்**
பொற்பதி விநாயக தேவஸ்தான பிரதமகுரு.



யாழ்ப்பாணத்தின் வடக்குப் பகுதியில் கொக்குவில் கிராமத்தில் ஆன்மீகத்தில் பெரிதும் மக்களையும் மாணவர்களையும் நாட்டம் கொள்ளும் வகையில் கடந்த வருடம் **18.11.2012** அன்று யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்து மாணவர்களை ஆன்மீகத்தில் ஈடுபடச் செய்து அறத்தைப் போதித்தது மட்டுமல்லாமல் சைவ சமயத்தின் பாரம்பரியக் கலைகளான நடனக் கலைகள், பண்ணிசை வகுப்புக்கள் போன்றவை அல்லாமல் மாணவர்களை ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று வழிபாட்டு முறைகள் சைவசமய பாரம்பரியங்களைப் போதித்து மற்றும் கணினி பயிற்சி முறைகளை மாணவர்கள் இலகுவிலே பயிலக்கூடிய வகையில் இந்த அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்து இன்று ஒரு வருட (நிறைவை) அகவையைக் கொண்டாடி நிற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மற்றும் சைவசமய பாரம்பரியங்களின் ஆன்மீக கொள்கைகள் குறைந்து வருகின்ற இக்காலகட்டத்தில் அதைத் தூக்கி நிறுத்தி மக்களுக்கும் மாணவ சமுதாயத்துக்கும் பெரிதும் பயன் தரக்கூடிய வகையில் அமைந்திருப்பது கொக்குவில் வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். மற்றும் இந்தக் காலத்துக்கு எது தேவையென்பதை அறிந்து தனது சொந்தக் காணியிலே இப்படியான ஒரு அறநெறிப் பாடசாலையை நிறுவி சைவத்துக்கும் தமிழுக்கும் பெரிதும் தொண்டாற்றிய திரு. சுசீந்திரனின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. இப்படியான ஒரு அறநெறிப் பாடசாலை இன்று ஒரு வருட நிறைவோடு நிற்காமல் இன்னும் வெள்ளிவிழா, வைரவிழா போன்ற பல நிறைவுகளைக் காண வேண்டுமென்றும் இந்தப் பாடசாலையின் முதல்வர் திரு. சுசீந்திரனின் குடும்பமும் சகல கலைகளும் வளங்களும் பெற்று நீண்டகாலம் வாழ வேண்டுமென்று எல்லாம்வல்ல பொற்பதி விநாயகர் அருள்வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

**பிரம்மஸ்ரீ ச. ஜெயசங்கரசர்மா**
கோணாவளை வைரவர் தேவஸ்தானம்,
கொக்குவில் பிரதமகுரு.



"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இத்திருநாட்டிலே அறத்தை மேம்படுத்தி நெறிமுறை பிறழாது கலை, இலக்கியம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றை வழிமுறைப்படுத்திவரும் காலசந்ததியினரை நல்வழிப்படுத்திவரும் கிருஷ்ணா அற்நெறிப் பாடசாலை சிறப்புற்று வளர என் ஆசிகளை மனமார வழங்கி அகமகிழ்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**திருமதி அனந்தலெட்சுமி**
**மாணிக்கராஜசர்மா**
இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ் மாவட்டம்.



இந்துசமயத்தின் பெருமையை வெளிப் படுத்தும் நோக்கில் யாழ் விஷன் இந்து மன்றத் தினர் செயற்படுகிறார்கள் என்பதற்கு உதாரணமாக விளங்குவது ஸ்ரீ கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை யாகும். 2012ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் கார்த்திகை மாதம் 01ஆம் ஆண்டைக் கொண்டாடும் ஸ்ரீகிருஸ்ணா அறநெறிப் பாடசாலையானது இவ்வொரு வருடத்தில் அறநெறி பயிலும் மாணவர்களைச் சிறந்த முறையில் வளர்த்தெடுத்துள்ளது என்பதற்கு எமது திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பண்ணிசை, நாடகப் போட்டிகளில் முதலாமிடம் பெற்றதன் மூலம் அறியலாம். ஏனைய பேச்சு, கட்டுரைப் போட்டி களிலும் முதல் மூன்றிடங்களிற்குள் தேர்ச்சிபெற்றுச் சிறப்புடன் திகழ்கின்றது.

கலைகளுடன் மாணவர் அறிவுத்திறன், விளையாட்டு, உலக அறிவு, சமய ஆலய வழிபாட்டுத் தத்துவங்களையும் வளர்த்தெடுத்தல் எனப் பல அறப்பணிகளை ஆற்றிவரும் இப்பாடசாலையின் நிர்வாகத் தினரது செயற்றிறமை மேலும் சிறக்கவேண்டும்; இப்பாடசாலையில் பணியாற்றும் அனைவரும் உயர்வாழ்வு வாழ்ந்து உலகிற்கு முன்னு தாரணமாகத் திகழ எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் அருள் என்றென்றும் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து என் நல்வாழ்த்துக்களையும் அன்புடன் அனைவரிற்கும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"

"வாழ்க வளமுடன்"

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ஆலய 3ஆம் திருவிழாவின்போது
காவடி நடனம் - 14.08.2013





நல்லூர் ஆலய திருவிழாவில் நமது பாடசாலை பண்ணிசை
மாணவர்களின் பஜனை - 26.08.2013



எமது பாடசாலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட
சிலைகளினால் ஆன நவராத்திரி கொலு - 05.10.2013







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் பண்ணிசை மாணவர்கள் - கீழ்ப் பிரிவு



எமது பாடசாலையின் பண்ணிசை மாணவர்கள் - மத்திய பிரிவு



எமது பாடசாலையின் பண்ணிசை மாணவர்கள் - மேற் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன்
ஓய்வுநிலை விரிவுரையாளர்.



யாழ் விஷன் அறநெறிப் பாடசாலையின் கலைவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

எனும் வாக்கிற்கிணங்க யாழ் விஷனின் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை இயக்குநர்கள் திரு. திருமதி சுசீந்திரன் தம்பதியினர் கொக்குவில் வாழ் மாணவர்களுக்கு சிறந்த ஒரு கல்விப் பணியை முன்னெடுத்து வருகிறார்கள். போதிய வசதியற்றவர் களுக்கு கல்வியிலும், கலைகளிலும் பிரத்தியேக வகுப்புகளை ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகிறார்கள். அத்துடன் யோகா, ஆங்கிலம் போன்ற துறைகளில் வகுப்புகளை நடாத்தி அவர்களின் தரத்தை உயர்த்துவதில் முன்னின்று பணியாற்றுகிறார்கள். அதற்கு வேண்டிய நூல்நிலைய வசதியைக்கூட பாடசாலையில் ஏற்படுத்திக் கொடுத்திருக் கிறார்கள்.

**"மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை"** என்பதற்கிணங்க புலம் பெயர்ந்து லண்டன் மாநகரில் வாழ்ந்தாலும் தங்கள் தாய் மண்ணை மறவாமல் கல்விப் பணியைப் போதிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியையும், கலைகளையும் போதித்து வருகிறார்கள். இந்தப் பணி மிகவும் பாராட்டப்பட வேண்டியது. எனவே அவர்களது தன்னலம் கருதாத சேவை சிறக்க எல்லாம்வல்ல இறையருள் துணை நிற்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம்
Estd 1938

**J/ KOKUVIL SRI RAMAKRISHNA VIDYASALAI**

யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

தொலைபேசி இல—021 205 2444

செல்வி க. கமலநாயகி
..............................
முதல்வர்

கொக்குவில்
KOKUVIL
ஸ்ரீலங்கா
SRILANKA
2013 / 10 / 09

# வாழ்த்துரை

**செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம்**
அதிபர்,
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயம்.



கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை ஒரு வருடப் பூர்த்தி விழாவினைக் கொண்டாடுவது எம்மைப் பெரிதும் மகிழ்வடையச் செய்கின்றது. சமூகத்தின் இன்றைய தேவையை அறிந்து இதன் செயற்பாடுகள் அமைந்திருப்பதனால் சமூகத்தவரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளமை கண்கூடு.

இவ் அறநெறிப் பாடசாலையானது இந்துசமய, கலாசார அமைச்சின் பாடத்திட்டத்திற்கமைவாக அறநெறி வகுப்புக்களை நடாத்தி வருவதுடன் சிறுவர்களின் பல்திறப்பட்ட ஆளுமைப் பண்புகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் கலை வகுப்புக்கள், விளையாட்டுக்கள், கணினிக் கல்வி, நூலக சேவை என்ற பல செயற்பாடுகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

உள்ளத்தின் உணர்ச்சிகளைப் பண்பட்ட முறையில் வெளிப்படுத்த கலைகள் உதவுகின்றன. அந்தவகையில் இங்கு நடைபெற்றுவரும் பண்ணிசை, நடனம், வயலின், மிருதங்கம், சித்திரம், சிற்பம் ஆகிய கலைகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் மாணவர்களிடையே கலைத்திறன்களை வளர்த்தெடுக்க உதவும் என திடமாக நம்பலாம்.

இங்கு அமைந்திருக்கும் நூலகம் அனைவருக்கும் வரப்பிரசாதமாகும். இன்று கணினி விளையாட்டு, கைத்தொலைபேசி உரையாடல் என்ற நவீன மின்னியல் சாதன கலாசாரத்தினுள் மூழ்கி அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வென்று நினைக்கும் இளம் தலைமுறையினர் வாசிப்பின் மகத்துவத்தை உணர்ந்து இந்த நூலகத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் இங்கு இடம்பெறும் சதுரங்கம் போன்ற உள்ளக விளையாட்டுக்கள் பிள்ளைகளின் சிந்தனையைத் தூண்டுவதுடன் நல்லதொரு பொழுதுபோக்காய் அமைகின்றது. இவை மட்டுமல்லாது இந்த அறநெறிப் பாடசாலையில் "காலத்தால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தில் மாணப் பெரிது" எனும் வள்ளுவனின் வாக்கிற்கமைய காலத்தின் தேவை கருதி கணினிக்கல்வியும் கற்பிக்கப்படுகிறது. இன்று கணினியை அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அந்த வகையில் சிறுவர்களை அவர்களுடைய எதிர்காலத்தை வெற்றிகரமாக முகம் கொள்ளத் தயார்ப்படுத்தும் இம்முயற்சி வரவேற்கத்தக்கதாகும்.

இவ்வாறு பல சேவைகளையாற்றிவரும் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை ஒரு வருடப் பூர்த்தி விழாவினைக் கொண்டாடுவது போல இன்னும் பல ஆண்டு விழாக்களைக் கொண்டாடவேண்டும் என வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.


With Best Compliments From

**VAISHNA SUPPER FOOD**

Grocery, Offlicence
Retail Agent for Sri Lankan & Indians
Sea Foods and Vegetable & Magazines
396, Ewell Road,
Tolworth, UK
KT6 7HF

**Telphone: 020 83996488**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி

க. தவகீஸ்வரன்



பற்பல கலைகளை ஐயமறக் கற்பித்து ஆரோக்கிய மான சந்ததிகளைப் பிரசவிக்கும் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையின் காகித விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகம் குளிர் கின்றேன்.

திரு. கந்தையா சுசீந்திரன், திருமதி சுசீந்திரன் அருணா ஆகியோரின் கடும் பிரயத்தனத்தில் 18.11.2012 இல் ஆரம்பிக்கப்பட்டு நேரிய வழியை யும் தேறிய மனதையும் மகிழ்விக்கும் மாபெரும் பணியை இந்த கிருஸ்ணா எனும் "யாழ் விஷன்" செய்து வருகிறது.

இப்பாடசாலையானது சமயம், பண்ணிசை, யோகாசனம், சித்திரம், வயலின், நடனம், மிருதங்கம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றை அனுபவமும் ஆற்றலுமிக்க ஆசிரியர்களைக் கொண்டு திறம்பட மாணவருக்குக் கற்பித்து வருகிறது.

"கடுகு சிறிதெனிலும் காரம் பெரிது" என்பார்கள். இதற்கு இணை யாக யாழ் விஷன் நூலகத்தில் உள்ள ஒவ்வொரு துறைசார் புத்தகங்களும் மிகவும் பயனுறுதியானவை. மொழியியல், ஆன்மீகம், தத்துவம், புவியியல், சட்டவியல் மட்டுமல்ல சிறப்பான ஆங்கில நூல்களைக் கொண்டு நல்வழிகாட்டும் மந்திரியாக இருந்து மாணவ கலங்களை நற்கரையேற்றும் மகோன்னத பணியில் இவ்அறநெறிப் பாடசாலை இலங்குகின்றது.

புலத்திலிருந்து (லண்டன்) கொண்டே பாடசாலையில் நடக்கும் சகல விடயங்களையும் உடனுக்குடன் கண்காணிக்கும் தொழில்நுட் பத்துடன் நிறைவேற்று செயற்றிறன் கொண்டவர்களாக இயக்குனர்கள் விளங்குவது பாராட்டத்தக்கது.

ஓராண்டு நிறைவுக் களத்தில் களிகூடும் இப்பாடசாலை இன்னும் வளர்ச்சிபெற்று தன் இலக்கு எனும் வெற்றிபெற அயராது முயன்று சிறக்க வாழ்த்துகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்
J/Kokuvil East Namagal Vidyalayam
ஸ்தாபிதம் Estd - 1934

Potpathy Road,
Kokuvil East,
Kokuvil.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
201......................

# வாழ்த்துரை

அதிபர்,
யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்,
பொற்பதி வீதி, கொக்குவில்.



யாழ்ப்பாணர் யாழ் இசைத்த யாழ்பாடியிலே
நாம் போற்றும் பிரதேசமாம் திருநெல்வேலி
சீர்கொண்ட வளைவை எழில் கொண்டு
கோணாவளை எனும் வீதி பெற்று
பார் போற்றும் பண்ணிசையை
ஊர் போற்ற உரைக்கின்ற
பேர் பெற்ற இடம்தான்
யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை.

பூத்துக் குலுங்கி பொலிந்து மணம் வீசி
எத்திசைக்கும் இசை கொண்டு இன்பம் பொங்க
நல்ஞானம் உணர்த்தவே முயன்றிட்ட யாழ்விஷனை
எல்லோரும் போற்றுகின்றோம் புது உலகம் படைத்திடுவாய்.

சாதனைகள் பல செய்து - பார்தனில்
சரித்திரம் தான் படைத்திடவே
யாழ் விஷனே வாழி வாழி
கிருஸ்ணா அறநெறியே எந்நாளும் வாழி வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**J/ KOKUVIL STATION C. C.T.M.SCHOOL**
**யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை**

Principal
Mrs.Y.Thiraviyanathan
[B.Com (Hones) M.Ed]
S.L.T.S-1

KOKUVIL,
JAFFNA.

# வாழ்த்துரை

**திருமதி யோ. திரவியநாதன்**
அதிபர்,
யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை,
கொக்குவில்.

கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையானது தனது அர்ப்பணிப்பு மிக்க சேவையில் ஒருவருட பூர்த்திவிழாவினைக் கொண்டாடுகின்ற வேளையிலே வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் அதிபர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பாரதியின் "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி" என்ற வாக்கிற்கு அமையவும், யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கனியம் பூங்குன்றனாரின் வார்த்தைக்கு செயல்வடிவம் கொடுத்து மாணவர்களுக்கு அறநெறிப் பாடசாலை ஊடாக ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் வழங்கிவருகின்ற நிறுவனத்தின் இயக்குனர் திரு.திருமதி சுசீந்திரன் குடும்பத்தினரின் பணி சிறக்க வாழ்த்துவதோடு, அறநெறிப் பாடசாலை தொடர்ந்து பல்வேறு மாணவர்களுக்கு பணிசெய்ய எல்லாம் வல்ல கோணாவளை வைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Priben

EMAIL: ben@priben.co.za
REG: 1998/060981/23
TEL: +27114732149
FAX: 0866921009
ADDRESS: Unit 2, Motor City,
26 Main Reef Road Langlaagte,
Gauteng South Africa

**06 November 2013**

**Krishna Araneri School**

**Kokuvil**

**Sri Lanka**

**To: The Trustees and Benefactors**

We have followed the good work, the projects and life changing experiences at Yarl Vision's Krishna Araneri School in Kokuvil, Jaffna. We can only imagine the positive impact your kind gestures and tireless working has had on the community. This initiative is a shining example of triumph of the human spirit and we are sure you have made an indelible difference to the children in the school and indeed the community.

Having an opportunity to help shape the future for these children is a blessing.

We applaud your fine work, passion and resolve and hope the future brings good tidings for Yarl Vision's Krishna Araneri School. Teaching is a noble profession when compared with all other professions and the role of Teachers is significant when it comes to creating human resources.

Congratulations on your 1st anniversary. ***"The best way to find yourself is to lose yourself in the service of others"***.

Thank you for affording us this opportunity in acknowledging your contribution to this community.

The ***Lenasia South Thamil Academy and Priben Distribution of South Africa*** extends our heartfelt blessings to Krishna Araneri School for their anniversary and future.

Priscilla Arumugam

Managing Member

**Priben Distribution & Lenasia South Tamil Academy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

திருமதி அனந்தலெட்சுமி மாணிக்கராஜசர்மா
இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ். மாவட்டம்.

"நமக்கு இந்தச்சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம்பெறும் பொருட்டேயாம்" என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானது வாக்கு. பசுவின் உடல் முழுவதும் பாலிருந்தாலும் அதனை அதன் முலைக்காம்பு வழியாகத்தான் நாம் பாலைப் பெறுகின்றோம். அதேபோல் எங்கும் நிறைந்த இறைவனை அவனது பரிபூரணமான அருளை ஆலய வழிபாட்டின் மூலமே நாம் பெறமுடியும். ஆன்மா லயப்படும் இடம் ஆலயமாகும். ஆலயங்கள் எப்போதும் புனித அலைகளால் சூழப்பட்டுள்ளன. எனவே அப்படியான இடத்திற்கு ஆசாரசீலராக நாம் சென்று வழிபடுவோமானால் நிச்சயம் நல்லருள் பெறலாம்.

"ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்
வாக்கையாற் பயனென்"

- திருநாவுக்கரசு நாயனார் பாடிய

இத்தேவாரம் மூலம் ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம் வெளிப் படுத்தப்படுகின்றது.

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியோடு ஆலய வழிபாட்டு முறைப்படி நாம் வழிபாடுகளை மேற்கொள்வோமானால் வெற்றி நிச்சயம்.

எனவே ஆலய வழிபாட்டை மேற்கொள்ளக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை நோக்குவோம். ஆலயம் செல்லுமுன் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று விபூதி நெற்றியில் தரித்துச் "சிவசிவ" எனச் சிவனைத் தியானிக்க வேண்டும்.

ஆண்கள் மேலங்கி நீக்கி வேட்டியுடன் சால்வையும் அணிந்து செல்லவேண்டும். ஏனெனில் சுபகாரியங்களில் ஆண்கள் ஈடுபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை சிவன், சக்தியைக் குறிப்பதற்கு இரட்டை வஸ்திரம் தரிப்பதே முறை. அபரக்கிரியைகளின் போதுதான் வேட்டிமட்டும் அணிய வேண்டும். எனவே வேட்டி, சால்வை அணிந்து ஆண்கள் ஆலயம் செல்லவேண்டும். பெண்கள் கலாசார உடைகளான அவரவர் வயதுக் கேற்ற ஆடைகளில் (முழுப்பாவாடை, சட்டை, பாவாடை தாவணி, சாறி) ஒன்றை அணிந்து செல்வதுதான் நன்மை. முக்கியமாக நேர்த்திக் கடன், வேண்டுதல் செய்பவர்கள் இவ்வாறு கலாசார உடைகளணிந்து வழிபாட்டை மேற்கொள்வதால் விரும்பிய எண்ணம் எளிதில் சித்திக்கும். பெண்கள் வழிபாடுகளை மேற்கொள்ளும்போது தாவணித் தலைப்பைத் தொங்கவிட்டால் வழிபட்ட பலனைப் பூமிதேவி ஈர்த்துவிடுவாள். இதனால் முழுப் பலனைப்பெறுவது கடினம். எனவே வழிபட்ட பலன் முழுமையாகக் கிடைக்கப் பெண்கள் வழிபாடுகளை மேற்கொள் ளும்வேளை தம் தாவணித் தலைப்பை இடுப்பைச் சுற்றிச் செருக வேண்டும். இதனால் நன்மை.

இவ்வாறாக ஆடைகளை அணிந்து ஆலயம் செல்லும்போது வெறும் கையோடு செல்லாது தங்களால் இயன்ற அர்ச்சனைப் பொருட் களைக் கொண்டு செல்லவேண்டும். அபரக்கிரியை நடைபெறும் இல்லங் களிற்கு மட்டும்தான் நாம் வெறும் கையுடன் செல்லவேண்டும். மற்றப் படி உறவினர், நண்பர் இல்லங்கள் செல்லும்போதும் இறைவனை வழிபட ஆலயம் வரும்போதும் கையுறைகளாக ஏதாவது கொண்டு செல்லவேண்டும். வசதியற்றவர்கள் இறைவனிடம் வரும்போது பூக்கள் அல்லது ஒரு பச்சிலையாவது கொண்டு சென்று வழிபடலாம்.

இதனையே திருமந்திரம் "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" என்கிறது.

இவ்வாறு கொண்டுவரும் அர்ச்சனைப் பொருட்களை இடுப்பிற்கு மேல் இருக்குமாறு கைகளில் கொண்டுவந்து அங்குள்ள நீர்நிலைகளில் கழுவி அவரவர் பாதங்களையும் குதிக்கால் நனையுமாறு அலம்ப வேண்டும். குதிக்கால் அலம்பாததால் நளமகாராஜனைச் சனீஸ்வரன் பிடித்தார் என நளமகாராஜா சரித்திரம் கூறுகிறது.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்கக் கோபுரத்தை வணங்கி அதன்பின் நுழைவாயிலில் துவாரபாலகர்கள் இருவரையும் வணங்கி அவர்களிடம் ஆலயமுள்ளே செல்ல அனுமதிபெற்றதாக மனதில் நினைத்து ஆலயத்தினுள் செல்ல வேண்டும். துவாரபாலகர்கள் அமைக்கப்படாத ஆலயத்தில் நுழை வாயில் இருபுறமும் அவர்கள் இருக்கிறதாகப் பாவித்து வழிபட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதே பணிவான, ஆணவமற்ற மனத்திற்கு அடையாளம். ஆணவம் அடங்கி உள்ளே சென்ற பக்தன் முதலில் பலிபீடத்தைப் பார்த்து மனதால் பாவம், துன்பம் அத்தனையையும் பலியிட்டதாக நினைக்கவேண்டும். இதனால் மனம் சுத்தமாகிறது.

முதலில் மூலஸ்தான இறைவனை வழிபடலாகாது. முதல் வணக்கத்திற்குரிய விநாயகரை வலது கையால் வலதுநெற்றிப் புட்டியிலும், இடதுகையால் இடது புட்டியிலும் மூன்றுமுறை குட்ட வேண்டும். இதனால் எம் உடலிலுள்ள நரம்புகள் அதிர்வுபெறச் சீரான இரத்தோட்டத்தால் உடல் சுறுசுறுப்படையும். ஆண்கள் வலது கையால் இடது காதையும், இடது கையால் வலது காதையும் பிடித்து மூன்று முறை தாழ்ந்து எழும்புதல் தோப்புக் கரணமாகும். குட்டி வழிபாடு செய்வது பெண்கள். தோப்புக்கரணம் போடுவது பெண்களிற்கு அவசியமில்லை. குட்டித் தோப்புக்கரணம் போடுவது ஆண்கள் செய்யும் வழிபாடு.

இவ்வாறு விநாயகர் வணக்கம் செய்தபின் மூலமூர்த்தியை வழிபடவேண்டும். நந்தி பலிபீடத்திற்கும், மூலமூர்த்திக்குமிடையே குறுக்காக ஒரு நாளும் செல்லலாகாது. இச்செயல் ஆன்மாவையும், இறைவனையும் பிரிப்பது போன்றது. எந்நேரமும் சிவனை நோக்கிய நந்தியின் வழிபாட்டிற்கு இடையூறு விளைவிப்பது. எனவே குறுக்கே செல்லக்கூடாது.

அதன்பின் ஆலயம் வலம்வந்து பரிவார தெய்வங்களை வழிபட வேண்டும். மூலமூர்த்தி சிவலிங்கமாயின் மூன்றுமுறையும்; அம்மன், விஷ்ணுவாயின் நான்கு முறையும்; முருகன், வைரவர், வீரபத்திரர் போன்ற தெய்வங்களாயின் மூன்றுமுறையும்; விநாயகராயின் ஒரு முறையும்; சூரியன் மூலமூர்த்தியாயின் இருமுறையும் ஆலயப் பிரதட்சணம் செய்ய வேண்டும். விநாயகர் கோவில் தவிர்ந்த ஏனைய ஆலயங்களில் ஆகக் குறைந்தது மூன்றுமுறை ஆலய வரப்பிரதட்சணம் செய்வதே உகந்தது. இவ்வாறு வலம்வரும்போது நவக்கிரக சன்னி தானம், சண்டேஸ்வர சன்னிதானமும் செல்லலாகாது.

மூலமூர்த்தியைப் பரிவார தெய்வ சன்னிதானங்களையும் வழிபட்டு மூலமூர்த்தி வழிபட்ட பின்புதான் நவக்கிரக சன்னிதானம் சென்று மூன்று அல்லது ஒன்பது முறை வலம்வந்து நவக்கிரகங்களை வழிபட்டபின்பு மூலமூர்த்தியைத் தரிசித்து அங்கு மண்டபத்தில் சிறிதுநேரம் அமர்ந்து தியானம்செய்ய வேண்டும். நாம் வீட்டிலிருந்து ஆலயத்திற்கு வழிபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது எம்முடன் துணைக்கு இருதேவர்கள் துணையாகக் கண்ணிற்குத் தெரியாமல் சூக்கும வடிவில் எம் அருகே வருவார்கள் என்பது ஐதீகம். நாம் ஆலயத்தில் அமரும் வேளையில்தான் அவர்கள் மனநிறைவுடன் அங்குள்ள மூலமூர்த்தியுடன் ஐக்கியமாவார்கள் எனப் புராணங்கள் கூறுகின்றன. எனவே ஆலயம் சென்றால் சிறிதுநேரம் உட்கார்ந்து வருவது சிறப்பான பலன்தரும். ஆலய உள்வீதியை வலம் வருவது ஆகக்குறைந்தது மூன்றுமுறை. ஆனால் திருவிழாக் காலங்களில் ஆலயம் வலம் வராத பக்தர்கள் உற்சவமூர்த்தி உள்வீதி வலம்வரும்வேளை அவ்வுற்சவ மூர்த்தியோடு சேர்ந்து ஒருமுறை ஆலயம் வலம் வரலாம். இவ்வாறு நடக்கும் ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு அஸ்வமேத யாகம் செய்த பலனைக்கொடுக்கும்.

தீபாராதனை, பூசைகள், அபிஷேகங்கள் நடைபெறும்வேளை நடைபெறும் இடத்திலிருந்து அவற்றைக் கண்களால் (கண்களை மூடாமல்) தரிசிப்பதே உத்தமம். அச்சமயம் ஆலயவலம் வருதலாகாது.

சன்னிதானங்கள் பூட்டியிருக்கும்போதோ அல்லது திரையிட்ட பின்போ, அல்லது ஆலயம் பூட்டினாலோ அச்சன்னிதானங்களைப் பார்த்து வழிபடலாகாது. ஏனெனில் அது மாயையைக் குறிப்பதால் அப்படி வழிபட்டால் மாயையை வழிபட்டதாகின்றது. எனவே அச்சமயம் கண்களிற்குத் தெரியும் சன்னிதான கோபுரங்களின் கலசம், அதிலமைக்கப்பட்ட இறைதிருவுருவங்கள் மற்றும் ஆலயம் பூட்டி விட்டால் ஆலயப் பிரதான கோபுரத்தை வழிபடுவதே மிகுந்த சிறப்பு. இவ்வாறு செய்தாலே ஆலயத்திலுள்ள இறைவனை வழிபட்ட பலனைப் பெறலாம். அதைவிடுத்து ஆலயம் பூட்டிவிட்டதே என அதோடு சம்மந்த மானவர்களை மனதால் ஏசினால் பாவம்தான் சேரும். ஆகவே கோபுர தரிசனம் வழிபட்ட முழுப்பலனையும் தரும்.

ஆலயத்தினுள் அதிகபேச்சு, சிறுவர்கள் விளையாடுதல், சண்டையிடுதல், காலை நீட்டியிருப்பது, வெற்றிலை, "பாக்கு உண்ணுதல், மூக்கு நீர் சிந்துதல், அசௌசங்களுடன் செல்லுதல் ஆசாரமில்லாது செல்லுதல், பாதணி, தொப்பி போன்றவற்றுடன் செல்வது போன்றன செய்யத் தகாதவை. விபூதி, தீர்த்தம் போன்ற பிரசாதங்களைப் பெறும்போது இடது கைமேல், வலது கையை வைத்துப் பணிவுடன் வாங்கவேண்டும். அதற்கு முதல் பிரசாதம் தரும் குருவை பணிவுடன் வணங்கவேண்டும்.

பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம், ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யவேண்டும். இவ்வாறு செய்யும்போது வடக்குத்திசை, கிழக்குத் திசையாக மட்டுமே தலையை வைத்து நமஸ்கார வழிபாடு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் விளக்கேற்றி வழிபடும்போது விளக்கின் ஒவ்வொரு முகத்திலும் இரு திரிகள் ஒன்றாகச் சேர்த்து முறுக்கி அம்முகத்தில் இட்டு வழிபடவேண்டும். அச்சுடர்கள் கிழக்கு, வடக்கு, மேற்கு நோக்கிச் சுடர்விடுமாறு விளக்குகளை வைக்கவேண்டும். தெற்குப்பக்கத்திசை நோக்கி விளக்குகளை ஏற்றினால் காரியம் தடையாகும். எனவே ஏனைய 3 திசைகளில் ஏதாவது ஒரு திசை அல்லது 3 திசைகளிலும் விளக்குகள் ஏற்றி ஆலயத்தில் வழிபடுவது சிறப்பு. வெறும் தரையில் விளக்குகளை வைக்காது வாழையிலை அல்லது ஒரு தட்டில் ஏற்றி வழிபடுவது நன்மை.

பெண்கள் கூந்தலை முழுமையாக விரித்தபடி ஆலயம் செல்லக் கூடாது. ஏன் இல்லத்திலிருக்கும்போதும், வேறு எங்கு செல்லும்போதும் இதைத்தான் கடைப்பிடிக்கவேண்டும். கூந்தல் நுனியை மடித்து முடிந்தோ, அல்லது கிளிப் ஏதாவது போட்டு நுனிமயிரைச் சேர்த்து விடவேண்டும். இதனால் தலைமயிர் பறக்காது. தலைக்கு இரு பூக்களாவது சூடவேண்டும். வெறுங்கையோடு இருக்காது ஒரு ஜோடி வளையல்கள் இரு கைகளிலும் அணிவது சிறப்பு. இவ்வாறு மங்கள கரமாக வழிபாடுகளிலீடுபட்டு ஆலயத்திலிருந்து வீடு செல்வதற்கு முன் இறுதியாக வழிபட்ட பலன்கள் தரும் தெய்வமான சண்டேஸ்வர சன்னிதானத்திற்கு இடப்புறமாகச் சென்று சன்னிதானம் சென்று இரு கைகளையும் சுட்டுவிரல் பெருவிரலோடு இணைத்துச் சின்முத்திரையாக இருகைகளையும் பிடித்து மூன்றுமுறை கைதட்டும்போது அதிலிருந்து ஓங்கார ஒலி கேட்கும். அவ்வோசைகேட்ட சண்டேஸ்வரர் கண்களைத் திறந்து பார்ப்பார். அச்சமயம் நாம் எந்த வேண்டுதலிற்காக வழிபாட்டைச் செய்தோமோ அவ்வழிபாட்டுப் பலனைத் தருமாறு கேட்க வேண்டும். பின்பு வலமாக வந்து மூலமூர்த்தியைத் தரிசித்து விழுந்து வணங்கியபின் வழிபாட்டை நிறைவுசெய்து இல்லத்திற்கு மனநிறைவுடன் செல்லலாம்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என ஔவையார் மனிதப் பிறவியின் சிறப்பைக் கூறுகிறார். எனவே இப்பிறவி கிடைத்தது இறைவனைச் சேரும் பொருட்டேயாகும்.

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்"

எனத் திருவள்ளுவர் கற்றதன் பயன் கடவுளை வழிபடுவதாகும் என்பதைத் தன் திருக்குறளூடாக விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயக் கோபுரங்களிலுள்ள கலசங்களில் . பலவகைத் திரவியங்களிட்டபின் அதனை மேலே பொருத்துவார்கள். அத்திரவியங்களில் வரகரிசி இடிதாங்கியாகச் செயற்படும் ஆற்றல்மிக்கது. ஆகவே இது பன்னிரு வருடம் பழுதடையாதிருக்கும். அக்காரணத்தால்தான் அக்கால முனிவர்கள், மூதாதையர்கள் பன்னிரு வருடத்திற்கொருமுறை கும்பாபிஷேகம் நடைபெறவேண்டுமெனவும் இடிமின்னலிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதால் கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் எனவும் கூறியதன் தத்துவம் இதுதான். அதுமட்டுமல்ல கோபுரத்திற்கு மீறி உயரக் கட்டடம், வீடுகள் அமைக்கக்கூடாதென்பது எதற்கு என்பதும் இப்போது தெளிவாகப் புரிகின்றது. எனவே மனிதனாகப் பிறந்த நாம் ஆலயம் சென்று முறைப்படி வழிபட்டுக் கடவுள் அருள்பெற்று நல்வாழ்வு வாழ்ந்து முத்தியின்பம் பெறுவோமாக.

சுபம்!


With Best Compliments

**Dils News**
10-11 The Parade
St Albans Road East
Hatfield
Hertfordshire
AL10 0ET

With Best Compliments

Accountancy
Allied Limited

177 Kingsley Road
Hounslow
United Kingdom
Tele; 0208 572 6447




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச மகா யக்ஞங்கள்

ஹேமலோஜினி குமரன்
உதவிப் பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு.

இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு இந்துவும் செய்ய வேண்டிய முக்கிய ஐந்து கடமைகள் உள்ளன. அவையே பஞ்ச மகா யக்ஞங்கள் ஆகும். தேவ யக்ஞம், பிதிர் யக்ஞம், பூத யக்ஞம், மனித யக்ஞம், பிரம்ம யக்ஞம் எனும் ஐந்துமே அவை. தன்னை ஓம்புதலுடன் தான் வாழும் சமூகத்தையும் ஓம்பி வாழவேண்டும் என்கிறார் வள்ளுவர். இல்லறத்தார்களின் கடமை பற்றி சொல்ல வந்த வள்ளுவர்.

*"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்*
*தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"*

என பஞ்சயக்ஞத்தினை செய்யவேண்டிய அவசியத்தைக் கூறி யுள்ளார்.

தேவயக்ஞம் என்பது தேவர்களையும் எமது இஷ்ட தெய்வங் களையும் நினைத்து வழிபடுவது ஆகும். இதனுள் ஆலய வழிபாடு, பூசை, திருமுறையோதல், ஹோமம் செய்தல் முதலியன அடங்கும். இதன் மூலம் தேவர்கள் மகிழ்ந்து இல்லறத்தை இனிதே நடத்த அருள்புரிவார்கள்.

பிதுர்யக்ஞம் எனப்படுவது இறந்துபோன எம் முன்னோர்களுக்கு பிதிர்க்கடன் செய்வதாகும். வள்ளுவரும் முதலில் தென்புலத்தார் என பிதிர்க்கடனையே சுட்டியுள்ளார். பிதிர்க்கடன் செய்யாதோர் பிதிர் களின் வருத்தத்துக்கு ஆளாகநேரிடும். இதனால் வாழ்வில் துன்பம் மேலிடும். இதனை தவறாது செய்துவருபவர்கள் பெரும் பேறுகளும் சித்திகளும் பெறுவார்கள். நல்வாழ்வு வாழ்வதற்கு, எமது முன்னோர் களின் ஆசீர்வாதம் கிடைப்பதற்கு பிதிர்க்கடன் முக்கியமானதாக விளங்குகிறது.

பூதயக்ஞம் என்பது ஐந்தறிவு படைத்த பிராணிகளுக்கு தன்னிட முள்ள உணவுப் பொருட்களில் சிறிதளவேனும் கொடுத்து அவைகளின் வாழ்வுக்கு ஆதாரமாக இருத்தலாகும். இதன் மூலம் பிற உயிர்களின் வாழ்வுக்கும் அதாவது எறும்பு, காக்கை, நாய், பூனை முதலிய பிராணி களின் வாழ்வுக்கும் இல்லறத்தான் உதவவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித யக்ஞம் என்பது தன்னை நாடிவரும் மனிதர்கள் யாரானாலும் அவர்களை உபசரித்து தன்னிடமுள்ள உணவுகளை அவருக்கும் கொடுத்து மகிழ்தலாகும். இதனால்தான் விருந்தோம்பல் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

'செல் விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு"

என்பது வள்ளுவன் வாக்கு.

பிரம யக்ஞம் என்பது வேதங்களையும் முன்னோர் காத்துவந்த நூல்களையும் கற்று அதன்படி வாழ்தலாகும். இவ்வாறாக இல்லறத்தான் தான் வாழ்க்கையை நடத்தும் அதேவேளை தன்னைச் சுற்றியிருப் பவர்களையும் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்து வாழ்வதே அவனின் கடமையாகும். இவ்வாறான ஐந்து கடமைகளையும் செய்து நற்கதியடைவதே இல்லறத்தானின் கடமையாக விளங்குகிறது. எனவே ஒவ்வொரு இல்லறத்தானும் தன்னுடைய கடமைகளை உணர்ந்து பிதிர், தேவர், மனிதர், பிரமம், பூதம் ஆகிய ஐந்து யாகங்களையும் இனிதே ஆற்றிவர அவனது வாழ்வும் இன்பமயமானதாக விளங்கும். இதனா லேயே வள்ளுவர் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையுங் கூறி இதை செய்தால் வீடுபேற்றை அடையலாம் என நினைத்து வீடுபேறு பற்றி எதுவும் கூறவில்லை என்பது புலனாகிறது.


With Best Compliments From

**Krish Ratna & Company**

Solicitors
60 A/1 King Street
Southall
United Kingdom
Tele: 0208 574 6330




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தலும், சமூக நன்னடத்தைகளை மேம்படுத்தலும்

ச. சுப்பிரமணியம்
(இளைப்பாறிய மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்)

உலகில் வாழும் பல கோடி சிறுவர்களுக்கென்று பல உரிமைகள் சர்வதேச சமூகத்தாலும், ஐக்கிய நாடுகள் சபையினாலும் வரையப்பட்டுள்ளன. அதனைச் சிறுவர் உரிமைச் சாசனம் என அழைக்கப்படுகிறது. இதனை ஏற்றுக்கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அதில் கூறப்பட்டுள்ள உரிமைகளை இலங்கை அரசு தனது அரசியல் சாசனத்தில் சேர்த்துள்ளது. அவையாவன: 18 வயதுக்குக் குறைவான ஒவ்வொரு சிறுவரும் சிறுவராகக் கணிக்கப்படுவர்.

1. இவர்கள் சிறுபராயத்தில் பெற்றோருடன் சேர்ந்து வாழும் உரித்துடையவர்கள்.
2. அவர்கள் உயிர் வாழுவதற்கான உரித்துடையவர்கள்.
3. சிறுவர்கள் உணவு, உடை, உறையுள், சுகாதாரமான வாழ்க்கை வாழ்வதற்கான உரித்துடையவர்கள்.
4. உடல்வலு குன்றிய ஊனமுற்றோர் அவர்களுக்கான விசேட நிவாரணங்களைப் பெற்று வாழ்வதற்கான உரித்துடையவர்கள்.
5. தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்தவும், சமூக இசைவாக்கத்துடன் வாழ்வதற்குமான கல்வியைப் பெறுவதற்குரித்துடையவர்கள்.
6. சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து விலகி வாழவும், உரித்துடையவர்கள்.
7. சிறுவர்களை உடல் உழைப்பில் ஈடுபடுத்தவும், அவர்களின் உழைப்பைச் சுரண்டப்படுவதிலிருந்து விலக்குப்பெற்று வாழும் உரித்துடையவர்கள்.
8. சிறுவர்கள் தமக்கென இனம், சமயம், பெயர் ஆகியவற்றைக் கொண்டவராகவும் இருக்க உரித்துடையவர்.
9. இனம், மொழி, சமயம், சாதி அடிப்படையில் சிறுவர்கள் பாரபட்சமின்றி வாழவும், பாரபட்சம் காட்டப்படுதலின்றியும் வாழஉரித்துடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சிறுவர்கள் தமது அறிவு மேம்பாட்டிற்கான தகவல்களைப்பெறவும், ஒன்றுகூடவும் கருத்துக்களை வெளியிடவும் உரித்துடையவர்கள்.
11. சிறுவர்கள் தமது ஆற்றலுக்கும் திறமைக்கும் பொருத்தமான துறைகளில் மேம்பாட்டடையவும் உரித்துடையவர்கள். மேற்காட்டிய உரிமைகளை உடைய சிறுவர்கள், இன்று இலங்கையில் பல உரிமைகளை அனுபவிக்க முடியாதவர்களாக மனச்சோர்வுடனும், மகிழ்ச்சியின்றியும் வாழ்கின்றனர். அவர்களை உரிமையுடனும், மகிழ்ச்சியுடனும் வாழவைக்கவேண்டியது, அரசினதும், சமூகத்தினதும் பொறுப்பாகிறது.

இந்தப் பொறுப்பை உணர்ந்த சமூக விழிப்புணர்வு கொண்ட பலர் இந்தச் சிறாரின் மேம்பாடு கருதி பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அந்தவகையில் "யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையானது தனது பங்களிப்பை கடந்த ஓராண்டு காலமாக செய்து வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த நிறுவனமானது ஒவ்வொரு சிறுவர் உரிமைகளையும் அவர்கள் அனுபவிக்கச் செய்யும் முகமான குறிக்கோள்களைக் கொண்டதாகும். சிறுவர் உரிமைகளுக்கு மேலதிகமாக சிறுவரின் பெற்றோர்கள் அடிப்படை வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் பாடுபடுவது மிகச்சிறந்த பணியாகும். போரினால் பாதிக்கப்பட்ட பல பெற்றோர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தமுடியாமலும், தமது பிள்ளைகளை வாழவைக்க முடியாமலும் கஷ்டத்தில் வாழ்கின்றனர். பெற்றோரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதன் மூலம் சிறுவரை வாழவைத்தல்" எனும் கோட்பாட்டு அடிப்படையில் செயற்படுவது மிகவும் உயர்ந்த கொள்கையாகும். இவ்வில்லம் போல் பல நூறு பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையங்கள் எமது பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டியிருப்பதும் அவற்றை முறையாகப் பராமரிப்பதும் சாதாரண விடயமல்ல. சர்வதேசமெங்கும் பரந்து வாழும் தமிழ் உணர்வாளர்கள் எமது சமூக மேம்பாட்டிற்காகவும், அவர்களின் மேம்பாட்டிற்காகவும் இவ்வாறான தருமப்பணிகளில் ஈடுபடவேண்டும்.

சிறுவர்களின் மேம்பாட்டிற்கு உதவும் நோக்கில் ஓய்வூதியரான நான் சில பங்களிப்புகளைச் செய்துள்ளேன். அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. "சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவோம்"**

எனும் இறுவட்டு வெளியிட்டமை. இதனுள் சிறுவர்களின் உரிமைகளையும், அவ்வுரிமைகளை அனுபவிப்பதில் எதிர்கொள்ளும் கஷ்டங்களையும், சிறுவர்களின் எதிர்பார்ப்புக்களையும், பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களையும் பாடலாகவும், நாடகமாகவும், வெளிக்காட்டி யுள்ளேன். அத்துடன் சிறுவரின் ஆளுமை விருத்தியில் சாரணீய சேவை யின் முக்கியத்துவத்தைக் காட்டும் காட்சிகளையும் சேர்த்துள்ளேன்.

**02.மெய்நெறி: 30, அறநெறி: 60**

நாம் எதனை விதைக்கின்றோமோ அதனையே அறுவடை செய்யலாம் என்பது முதுமொழியாகும். இன்று இன்றைய இளைய சமூகத்தினர் சமூகச் சீரழிவு, சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஆளுமைப் பண்புகளைக் கொண்டு வாழ்பவராகவும், சமூகத்திற்கு இடையூறு விளைவிப்பவர்களாகவும் உள்ளனர் என்று நாளாந்தம் பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இதற்குக் காரணம் இன்றைய பொருத்தமற்ற கல்வியே ஆகும்.

வாழ்வுக்குத் தேவையான அறநெறிக் கருத்துக்கள் அறிவியல் ரீதியாகவும், போதிக்கப்படாமையும், அவற்றைக் கடைப்பிடிக்க வழிகாட்டாமலும் விட்டதுமேயாகும். நாம் நல்லதை விதைத்திருந்தால் நல்ல குணாம்சம் மிக்க சமூகத்தை உருவாக்கியிருக்கமுடியும். இக்குறை பாட்டினால் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என இன்றைய இளைஞர் சமூகம் மாறிவிட்டது எனலாம். இக்குறைபாட்டைக்களையும் முகமாக,

சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொண்ட ஆளுமைப் பண்புகளை (நல்ல பூரண மனிதனின் குணாதிசயங்களைத் தொகுத்து 90 பாடல் களாக்கி அவற்றை ஒரு பஜனை போன்று ஒருவர் சொல்லிக் கொடுக்க மாணவர்கள் கேட்டுப் படிக்கக்கூடியதாக இறுவட்டாக வெளியிடப் பட்டுள்ளது. இதனை நாளாந்தம் கேட்டுணரும் பிள்ளைகளின் மனதிலும் நல்ல ஆளுமைப் பண்புகளும்படியும். அவற்றையே வாழ்வில் கடைப் பிடிக்கவும் அது உந்துசக்தியாகவிருக்கும் எனும் தத்துவத்தின் அடிப் படையில் செய்யப்பட்டுள்ளது. நல்லதை விதைப்போம்; நல்ல விளைவைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03.உத்தமன் கதைகள்**

உத்தம குணங்களைக் கொண்டதாக மாணவ சமூகம் உருவாக வேண்டுமானால். உத்தமர் வரலாறுகளையும் அனுபவங்களையும் மாணவர்கள் படிக்க, வாசிக்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும். ஆனால் இன்று மாணவருக்குக் கிடைக்கும் வாய்ப்புகளோ அவ்வாறில்லை. கொலை, கொள்ளை, ஏமாற்று, பாலியல் துன்புறுத்தல்கள், பழிவாங் குதல் போன்ற தீய குணாம்சங்களை வெளிப்படுத்தும் கதைகள், நாவல்கள் போன்றனவே இவற்றை வாசிக்கும் மாணவர் எண்ணங்கள் அவ்வாறே பின்பற்றத்தோன்றும். இவற்றின் வெளிப்பாடே இன்றைய சமூகச் சீர்கேடுகளாகும். இக்குறைபாடுகளைக் களையும் நோக்கில்; ஒரு உத்தம சிறுவனின் வாழ்வில் நிகழும் சம்பவங்களையும், அதனை எவ்வாறு அவற்றைக் கையாளுகின்றான் என்பதையும் கதைகளாக்கி வெளியிட் டுள்ளதோடு; சாரணீயம் எத்தகைய சிறப்பானது என்பதையும் கதை யூடாகக் கற்கவும் சாரணீயத்தினூடாகச் செயற்படும்போது அது போதனையாகவன்றிச் சாதனையாக்கும் திறமையையும் வளர்க்க முயற்சிக்கும்போது மாணவர் சிறந்த ஆளுமைப் பண்புகளை வெளிக் காட்டவும் வாய்ப்புகிட்டும் எனக் கருதலாம். முற்கூறிய பங்களிப்புப் போல இன்னும் பல முயற்சிகளை ஈழம் வாழ் அறிஞர்கள் செய்யலாம் என்பதையும், அவர்களுக்கு ஊக்கமளிப்பதும் சமூகக் கடமையாகும்.

பிரமா
உங்கள் பொருட்களை இங்கு வந்து பொதிசெய்து
உங்கள் இல்லம் வந்து பெற்று
அனுப்பும் சேவையும் உண்டு
கப்பல் பொதி சேவை
Over 44 Years Experience
உலகெங்கும், கடல், வான் மார்க்கமாக
பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே இடம்!
REMOVAL SERVICES & AIRPORT TRANSPORT SERVICES AVAILABLE
- Shipping & Airfreight Worldwide Destination
- Import & Export
- Packing & Crating
- Collection & Delivery
- All Sizes & Weights
- Immediate Insurance Cover
- Complete Documentationservice

Office: A2C Redlands. Croydon CR5 2HT
020 8668 0252, 020 8646 5222, 07931 197 571, 07939 550 397
Perma International Shipping Ltd.
www.permainternational.co.uk / www.jpnshippingltd.co.uk / info@permainternational.co.uk / info@jpnshippingltd.co.uk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை நாமத்தின் மகிமை

ஆக்கம் : கு. குமாரக் குருக்கள்
சுபமஸ்து

திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் ஒரு விஷ்ணு பக்தன், நாராயணனின் பெருமைகளையும் மகிமைகளையும் நன்கு உணர்ந்தவர். இமைப்பொழுதும் நீங்காத நாராயணன் நாமத்தைத் துதிக்கும் ஓர் இறைபக்தன். அண்டசராசரம் அனைத்து ஜீவராசிகள் உய்யும் பொருட்டு கலகங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலமாக இறை உண்மைத் தத்துவங்களை விளங்கச்செய்யும் ஓர் பக்தன் ஆதலால் நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்று அனைவரும் கூறுவர். அவர் காலம் காலமாக நாராயண நாமத்தைச் செல்லும் இடம் எங்கும் உரத்த குரலில் ஜெபித்துக் கொண்டு செல்வார். ஓர் நாள் அவருக்கு நாராயண நாமத்தை எந்நேரமும் ஜெபித்து வருகின்றேன். ஆயினும் தேவலோகம் அனைத்தும் நாரதர் கலகக்காரன் என்று என்னைத் தூற்றுகின்றார்கள் என்று சஞ்சலம் ஏற்பட்டது. இதனால் நாராயண நாமத்தின் மகிமை இல்லையோ, நாராய ணனையே தினமும் மனதிலும் வாக்கிலும் உச்சரித்துத் திரியும் எனக்கு கலகக் காரன் என்ற வசைச்சொல் ஏற்பட்டுள்ளது என்று கலங்கி ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்திருந்தார். அவ்வழியாக நந்திதேவன் தேவ உருவில் அவ்வழியாக வந்தான். தேவனாகிய அவரைக் கண்டு தேவனே நாரதராகிய யான் சஞ்சல முற்று இருக்கிறேன். என் மனதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தாங்கள் தயவு செய்து என் சந்தேகத்தைப் போக்கமுடியுமா? என்று கேட்டார். தங்கள் சந்தேகம் எதுவென்றால் என்னால் போக்கமுடியும் என்று வழிப்போக்கனாகிய நந்திதேவன் கூறினார். நாரதர் கூறினார் தேவனே நான் சதா காலமும் நாராயண நாமத்தையே கூறியும் ஜெபித்தும் வருகிறேன். மூவுலகங்களிலும் என்னைக் கலகக்காரன் என்று அவமரியாதை செய்கின்றனர். இந்த நாமத்தை ஜெபிப்ப தனால்தான் இந்த துன்பத்திற்குக் காரணம் என்று பதிலளித்தார். அதைக் கேட்ட நந்திதேவர் நாரதரே மும்மூர்த்திகளின் முதல்வனாக பரமேஸ்வரரின் ஐந்தெழுத்து கொண்ட பஞ்சாட்சரமே உயர்வான மந்திரம். அனைத்துச் சித்தி களையும் தரக்கூடியது. இன்றுமுதல் ஓம் நமசிவாய என்ற பஞ்சாட்சரத்தை ஜெபித்தீர்களானால் உமக்கு ஏற்படும் அவமரியாதையிலும் சஞ்சலத்திலும் இருந்து நீங்கி மகிழ்ச்சியிலும் உமது வாயினால் ஜெபிக்கும் ஓசையை காதில் கேட்பவரும் துன்பத்தில் இருந்து நீங்கி பேரின்ப முத்தியடைவார்கள். அன்றி லிருந்து இதைக் கேள்வியுற்ற நாரதர் நமச்சிவாய என்ற பஞ்சாட்சரத்தை ஓதிவந்தார். ஒரு நாள் மந்திரத்தின் பலத்தை அறிய எண்ணினார். அவர் அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயானது நிற்பதைக் கண்டு கருணையுடன் அதன் அருகில் சென்றார். நாய் ஆனது சுருண்ட தன் வாலை அங்கும் இங்கும் அசைத்த வண்ணம் அவர் அருகில் சென்றது. நாரதரோ சிந்திக்கலானார்.

பஞ்சாட்சரத்தின் மகிமையை அறியும் பொருட்டு நாயின் காதில் ஓம் நமச்சிவாய என்று ஓதினார். நாயானது அங்கும் இங்கும் துள்ளி ஓடித்திரிந்தது. பின்பு திடீரென்று விழுந்து இறந்துவிட்டது. நாய் இறந்ததை அறிந்த நாரதர் மிகவும் கவலைப்பட்டார். சிறிது காலத்தின் பின் நாரதர் ஓர் புற்கள் நிறைந்த வனாந்தரம் போன்ற பாதையால் செல்ல நேரிட்டது. வெய்யில் காலம் ஆதலால் களைப்படைந்த நாரதர் அருகில் இருந்த கிணற்றடிக்குச் சென்று கிணற்றில் உள்ள நீரை வாளியால் அள்ளி தன் தாகம் தீர்த்தார்.

அதனைக் கண்ட புல் மேய்ந்துவிட்டு வந்த பசுவொன்று தாகத்தின் மிகுதி யால் நாரதர் நின்ற இடத்தை அடைந்து அவரைப் பார்த்து தலை அசைத்தது. இதன் தேவையை உணர்ந்த நாரதர் பசு தாகத்தால் தவிப்பதை உணர்ந்து அதற்கு நீர்த்தொட்டியில் நீரை நிரப்பினார். தன் களைப்பைப் பசு போக்கியது. மீண்டும் நாரதர் பஞ்சாட்சர மந்திரத்தை பசுவின் காதுகளில் "ஓம் நமச்சிவாய" என்று மந்திரத்தை ஓதினார். பசுவானது தனது தலையை சுழற்றி அம்மா என்று அலறியது. சிறிது நேரத்தில் அந்த பசுவும் வீழ்ந்து இறந்துவிட்டது. பசுவைக் கொன்ற பாவம் தன்னைச் சூழ்ந்து விடுமோ என்ற பயம் ஒருபுறம். பஞ்சாட் சரத்தை ஓதுவதால் விபரீதமான செயற்பாடுகள் ஏற்பட்டு விடுகிறது என்று மிக்க கவலையுடன் செல்லலானார். நாரதர் தொடர்ந்து தன் பயணத்தைத் தொடங்கலானார். வெகுநேரம் கழித்து விவசாயி ஒருவன் வயலில் நாற்று நட்டுக் கொண்டு நின்றான். நாரதர் அவன் அருகில் சென்றார். விவசாயி நாரதரே இறை நாமத்தையே தினமும் ஜெபித்துவரும் தங்களுக்கு ஏன் இந்தக் கவலை? எதையோ பறிகொடுத்தது போல் முகம் காட்டுகிறது. இது பற்றி யான் அறிய லாமா? என்று பணிவன்புடன் கேட்டான். நாரதர் கூறலானார். ஓ! விவசாயியே தாங்கள் கூறியது உண்மையே நந்திதேவர் கூறிய வார்த்தையை ஏற்று நான் உச்சரித்த நாராயண மந்திரத்தைவிட்டு நற்பலன் கிடைக்கும் என்று பஞ்சாட் சரத்தை ஓதினேன். முதல் நாயிடம் ஓதியபோது நாய் விழுந்து இறந்துவிட்டது. சிறிது காலத்தின் பின் உச்சரித்தபோது பசுவும் இறந்துவிட்டது. இதனால்தான் கலக்கத்திலும் குழப்பத்திலும் இருக்கிறேன். ஓம் நமசிவாய என்று உச்சரித் தமையால் அபரீதங்கள் நடைபெற்றன என்று விவசாயியின் காதுக்கருகில் நின்று ஓதினான். இதைக் கேள்வியுற்ற விவசாயி துள்ளிக்குதித்து கைகளைத் தட்டி மகிழ்ச்சியில் அங்கும் இங்கும் ஓடினான்.

நாரதரின் பாதங்களைத் தொட்டு சாஸ்டாங்கமாக விழுந்து கும்பிட் டான். செய்தவன் எழும்பவில்லை. நாரதரோ நீண்டநேரம் எழும்பாமல் கிடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயியைத் தூக்கலானார். அவனும் இறந்து கிடப்பதை அறிந்து ஆற்றொணாத் துயரும் பாவத்தின் பயமும் மேலோங்க அவ்விடத்தை விட்டு வேறொரு இடம் செல்லலானான். சென்ற நாரதர் ஒரு மகரிஷியின் குடிலைக் கண்டான். அங்கு சென்று உணவு அருந்தி தனது பசியையும் களைப்பையும் போக்க எண்ணினான். அந்தக் குடிலில் வசித்து வந்த மகரிஷியிடம் தேவரே நண்பகல் ஆதலால் உணவு அருந்தும் நேரம் வந்துவிட்டது. தங்களிடம் இருக்கும் உணவில் எதையாவது தந்து எனது பசியைப் போக்குவீராக என்று கேட்டார். மகரிஷியோ தேவரீருக்கு உணவு பரிமாறும் நிலையில் நான் இல்லை இன்று எப்பதார்த்தமும் நான் செய்யவில்லை என்று எமது இராட்சியத்தின் சக்கரவர்த்தியின் மகனுக்குக் குழந்தை பிறந்துள்ளது. அதுவும் ஆண் குழந்தை தங்கத்தொட்டிலில் இட்டு பெயர் சூட்டும் விழா நடைபெறவுள்ளது. அழைப்பு அனுப்பியுள்ளார்கள். நானும் செல்லவுள்ளேன். அங்கு தான் மதியபோசனம். தாங்களும் என்னுடன் வாருங்கள் என்று மகரிஷி கூறினார். நாரதருக்கோ மிக்க கவலை ஆயினும் ஒருவாறு மனதைத் தேற்றி ரிஷியுடன் நாரதரும் அரண் மனைக்குச் சென்று பெயர் சூட்டும் விழாவில் கலந்துகொண்டனர். அனை வரும் இளவரசனின் பெயரைகூறி வாழ்த்தினர். நாரதருக்கோ ஒரே பயத்தால் அச்சமுற்றார். மன்னன் அவர் அருகில் சென்று தொட்டிலின் அருகில் சென்று ஆசீர்வதிக்கும்படி பணித்தார். நாரதருக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை. தொட்டிலின் அருகில் சென்று வாய் முணுமுணுத்தது. கண்கள் சிவந்தது. என்ன செய்வது என்று அறியாது திகைத்தார். தொட்டிலில் கிடந்த பிள்ளை எழுந்து இருந்தது. எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். குழந்தை நாரதரைப் பார்த்து சிரித்து நாரதரே கலங்கவேண்டாம். பஞ்சாட்சர மந்தி ரத்தை ஓம் நம சிவாய என்னும் மந்திரத்தை நாயாக இருந்தபோது ஓதினீர். அப்பிறவி நீக்கி பசுவாகப் பிறந்திருந்தேன். அப்போதும் மந்திரத்தை ஓதினீர். அப்போதும் பாவங்கள் நீங்கி ஓர் விவசாயியாகப் பிறந்தேன். நீர் தெரிந்தோ தெரியாமலோ பிரணவத்தை என் காதுகளில் விழும்படி கூறினீர். உடனே அப்பிறவி நீங்கி இந்நாட்டின் இளவரசராகப் பிறந்து தங்கத் தொட்டிலிலே பவளமணி கோபுரங்கள் நிறைந்த அரண்மனையில் பிறந்துள்ளேன். பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுபவர்கள், நினைப்பவர்கள், தியானம் செய்பவர்கள் அனை வருமே உயர்ந்த பதவியடைவார் என்பது திண்ணம்.

சூட்சும வடிவமாகவும் உணர்வுகளுக்கு அகப்படாமலும் எம்மை எல்லாம் உயர் படைப்பைக் கொடுப்பது மந்திரங்களே. நாரதரே உம்மாலும் உமது ஜெபத்தின் மகிமையால் நான் கண்ணியமானேன் என்று கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் அன்றாட வழிபாட்டுமுறை

"வேதாகம வித்தகர்"
சிவஸ்ரீ சௌபாக்கிய சசிகுமாரக் குருக்கள் BA. (Hons)
(பிரதமகுரு. கொவன்றி ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம்)
பெரிய பிரித்தானியா.

ஆலயம் என்ற சொல் இந்துப் பண்பாட்டு மரபில் ஆன்மா எங்கு லயப்பட்டு அமைதிபெறுமோ அவ்விடத்தைக் குறிக்கும். ஆன்மா வானது இறைவன் எங்கு குடிகொண்டுள்ளானோ அங்கேயே லயப்படும் என்பதனால் இறைவன் குடிகொண்ட வீட்டையே ஆலயம் என்பர். இதனை கோயில், தேவக்கிருஹம், தேவாயதனம், தேவஸ்தானம், தேவா லயம் எனப் பலவாறு கூறுவர். இவ்வாலயத்திற்குச் செல்லும் அனைவரும் ஒரு வரையறைக்கு உட்பட்டு நியமமுறைப்படி ஆற்றவேண்டிய கருமத் தினையே வழிபாடு என்பர். இது பொதுத்தன்மை உடையதாய் இம்மையிலும் மறுமையிலும் சுகமளிப்பதாய் வேதாகமங்களால் வகுத்துக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் ஒருவர் எவ்வாறு செல்லவேண்டும் என்பதனை நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்கள் மிகச்சிறப்பாக குறிப்பிடுகின்றார். தோய்ந்து, தோய்த்து உலர்ந்த ஆடைதரித்து புறச் சிவசின்னங்களான விபூதி உருத்திராக்கம் முதலியன தரித்துக்கொண்டு அகச் சிவசின்னமான பஞ்சாக்ஷரமந்திரத்தை ஜெபித்துக்கொண்டு செல்லவேண்டும் என்கின்றார். இதில் அவரவர் தகுதிக்கேற்ப தமது நித்திய கர்மானுஷ்டங்களை ஆற்றவேண்டும் என்பதை சிவாகமங்கள் விரிவாக விதந்துரைக்கின்றன.

கோயிலுக்குச் செல்லும்போது அடியவர் வெறுங்கையுடன் செல்லலாகாது. குறைந்தபட்சம் ஒரு கைப்பிடி பூவோ பத்திரங்களோ கொண்டு செல்லவேண்டும் என்று கண்டிப்புடன் திருமூலர் திருமந் திரத்தில் செப்புகின்றார். இப்படியாக ஆலயம் செல்லும்போது கோபுரத்தை கண்டவுடன் "ஸ்துலலிங்கமாகிய" கோபுரத்தை வழிபட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோபுர தரிசனம் கோடிய புண்ணியம்" என்பர். ஊரிலே உயர்ந்த கட்டிடமான கோபுரத்தில் உள்ள கலசங்கள் சேர்த்துவைத்துள்ள இயற்கை சக்திகளை நாம் தரிசிக்கும்போது எம்மைச்சேரும் என்பதனால் கோபுர தரிசனத்துடன் வழிபாடு ஆரம்பமாகின்றது.

ஆலயத்தின் வாயிலை அண்மித்ததும் அங்குள்ள கிணற்றிலோ, குளத்திலோ, நீர்நிலைகளில் காலலம்பி ஆலயத்தினுள் செல்லவேண்டும். என்பர். ஏனெனில் வரும் வழிகளில் கால் அசுத்தப்பட்டிருக்கலாம் என்பதுமட்டுமன்றி குதிக்கால் குளிர்மை அடையும்போது உடலே குளிர்ந்து மனதில் எழும்தீய சிந்தைகள் அடங்கி அமைதியாக வழிபாடாற்ற உதவும் என்பதாலேயே. இதுபோல் சுத்தமாய் வருவது மற்றவர்களையும் சாத்வீகமடையச் செய்யும் என்பதும்கூட.

ஆலயத்தின் உள்வந்ததும் முதலில் விநாயகரை வழிபடுவோம். அப்போது தலையின் இரு மருங்கும் குட்டி, இரு காதுகளையும் பிடித்த வாறு இருந்து எழுந்து ஐந்து முறை செய்வோம். இதனை குட்டிக் கும்பிட்டு தோப்புக்கரணம் செய்தல் என்போம். புராணவாயிலாக தேவர்கள் விநாயகருக்கு செய்த சிறப்பு வழிபாடு எனக் காணக்கிடைத் தாலும் இன்றைய விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டு இதன்பயனால் அனைவரையும் செய்யச் சொல்கின்றனர். விநாயகர் அறிவின் கடவுள் என நாம் செய்வதைப் பார்த்த, அவர்கள் உண்மையில் தலையில் குட்டுவது மூளையின் செயல்திறனைக் கூட்டுகிறது. அதற்காக விநாய கருக்கு குட்டிக் கும்பிடுவதுபோல் அல்லாமல் மாறுபட்டு செய்வதால் எப்பயனுமில்லை. தோப்புக்கரணம் செய்வதால் நினைவாற்றல் கூடுகிறது. இதனை அவர்கள் "Super brain yoga" என பயிற்சியும் மேலை நாடுகளில் அளிக்கின்றனர்.

விநாயகர் வழிபாடு முடிந்ததும் மூலவரையும் ஏனைய பரிவார தெய்வங்களையும் மூன்றுமுறை வலம் வந்து வழிபடவேண்டும். இது வேகமாக அல்லாமல் மன ஒருமைப்பாட்டுடன் நிதானமாகச் செய்ய வேண்டும். இப்படி வலம் வருதல் நல்ல நடைப் பயிற்சியும்கூட. இதனை பிரதக்ஷிண நமஸ்காரம் என்பர். சுவாமிக்கு அபிஷேகம் செய்யும் போதோ அன்றி அலங்காராதிகள் நிமித்தம் திரையிட்டபோதோ பிரதக்ஷிணம் செய்யலாகாது. பூஜை நடைபெறுமாயினும் அபிஷேகம் நடைபெறு மாயினும் அதனை தரிசிக்கலாம். சுவாமிகளுக்கு நித்திய நைமித்திய பூஜைகள் முடிந்த பின்னரே பிரதக்ஷிணம் நமஸ்காரம் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதக்ஷிண நமஸ்காரங்கள் முடிந்த பின்னர் காமிக வழிபாட்டின் பொருட்டு அர்ச்சனை செய்விக்கலாம். அர்ச்சனை முடிந்ததும் தரப்படும் ஆராத்தி தீபத்தினைத் தொட்டு இரு கண்களிலும் ஒற்றி வணங்கியதும் விபூதிப் பிரசாதம் தரப்படும். அதனை வாங்கும்போது வலது கையின் கீழ் இடது கையை ஏந்தி இரண்டு கைகளாலும் வாங்கி வடதிசை நோக்கி சிவசிவா எனக்கூறி உத்தூலனமாகவோ திரிபுண்டனமாகவோ அணிய லாம். உத்தூலனம் என்பது திருநீற்றை வாங்கி நெற்றி நிறையப் பூசுவ தாகும். திருபுண்டனம் என்பது மூன்று குறிகள் வருமாறு அணிவது. இவ்வாறு அணிந்து மீதமுள்ளவற்றை உடலில் பூசிக் கொள்ளலாம். நிலத்தில் சிந்தலாகாது.

இதன்பின் சுவாமி தீர்த்தத்தை வலது கையால் உழுந்தளவு பிரமாணத்தில் பெற்று அருந்தவேண்டும். இத்தீர்த்த நீர் தொண்டை யுடன் நிற்கவேண்டும். வயிற்று செரிமமளவாய் இருத்தலாகாது. இதில் உள்ள மூலிகைகளின் பலன் அத்துனை வீரியம் கொண்டதாகும். தீர்த்தத்தின் பின் சந்தணம், குங்குமம் ஆகிய மங்கலப் பொருட்கள் தரப்படும். இவை குளிர்மை நிறைந்தவையும்கூட. இவற்றை எடுத்து வலதுகை மோதிர விரலினால் நெற்றிப் பொட்டில் தரித்துக் கொள்ள வேண்டும். நெற்றி பொட்டில் உயிர் முடிச்சு உண்டு என்பதனால் அது குளிர்மை அடையவேண்டி தரிக்கப்படுகிறது என்பதுடன் நெற்றியில் இவை தரிக்கப்பட்டிருந்தால் அவர்களை மனோவசியம் செய்வது கடினமானது. வெறும் நெற்றிப் பொட்டு எனில் இலகுவில் மனோவசியம் செய்யலாம். சுவாமிக்கு அர்ச்சனை செய்த பூவோ பத்திரமோ தரப்படின் அவற்றை தலையிலோ காதுகளிலோ வைத்துக் கொள்வது மரபாகும்.

சுவாமிகளின் வழிபாடு முடிந்ததும் ஈற்றில் சண்டேஸ்வரரை வழிபடுவர். இன்று சுவாமி வழிபாட்டின் அனுக்கிரகம் வேண்டியும், இறையருள் அன்றி ஆலயத்தில் இருந்து எதுவும் பெறப்படவில்லை என்பதையும் காட்டவும் இறை தியானத்தில் உள்ள அவரை மூன்றுமுறை கைகொட்டி வழிபடுவர். இது கேளிகையாக அன்றி பக்தி பூர்வமாகவே செய்யப்படும். ஆலயத்தில் சண்டேஸ்வரர் மற்றும் நந்திதேவரின் குறுக்கால் செல்லலாகாது. இவர்களுக்கும் மூலவருக்கும் இடையில் சூட்சுமமான ஞானத்தொடர்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழிபாடுகள் முடிந்ததும் கொடிமர மண்டபத்தடியில் வந்து வடதிசை நோக்கியவாறு ஆரஅமர்ந்து ஐந்து நிமிடங்களுக்காவது இறைதியானம் செய்தல் வேண்டும். முடிந்தவர்கள் இறை தோத்திரங் களையும் பாராயணம் செய்யலாம். இதன்பின் கொடிமரத்திற்கு அப்பால் அஷ்டாங்கமாகவோ, பஞ்சாங்கமாகவோ நமஸ்காரம் செய்தல் வேண்டும். ஆண்கள் தங்களது மெய், வாய், கண், மூக்கு, செவி, இரு கைகள், இருகால்கள், தலை ஆகிய எட்டு அங்கங்களும் நிலத்தில் படியு மாறு விழுந்து வணங்குதல் அஷ்டாங்க நமஸ்காரம் என்பர். பெண்கள் தலை, இரு கை, இருகால்கள் நிலத்தில் பதியுமாறு வழிபடுவது பஞ்சாங்க நமஸ்காரம் என்பர்.

இவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு கோபுரத்தைக் கடக்கும் போது கோபுர படிக்கட்டுக்களையும் தொட்டு வழிபட்டு வெளியில் உள்ள ஏழை எளியவர்களுக்கு எம்மால்முடிந்த தான தர்மங்களைச் செய்து ஆலய வழிபாட்டின் பூரண பலனைப் பெறுவோமாக. ஆனால் இவ்வழி பாட்டுக் காலங்களில் செய்யக்கூடாதவற்றை கண்டிப்புடன் விலக்க வேண்டும். ஆலயத்தில் பிறவார்த்தைகள் பேசிக் கதைத்தல், கூந்தலை அவிழ்த்து விட்டு திரிதல், சௌகரியமல்லாத ஆடைதரித்துச் செல்லல், ஆலய வளாகத்தை அசுத்தம் செய்தல், ஆலய வழிபாடு முடிந்து வீடு வந்ததும் அவ்வழிபாட்டின் சுவடே இல்லாமல் அனைவற்றையும் களைத்தல் முதலியனவாகும்.

முடிவாக தொகுத்து நோக்குமிடத்து ஆலய வழிபாடானது ஒரு தனி மனிதனின் ஆன்மீக அமைதி வேண்டி மட்டுமன்றி உளவியலாய் அறிவியலாய், விஞ்ஞானவியலாய், சமூகவியலாய் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களையும் அமைதியையும் தன்னகத்தே கொண்டதாய் ஒரு நியமப்படி பொதுத்தன்மை உடையதாய் வரையறுத்துள்ளதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

கதைத் தொகுப்பு:
**கு. குமாரக்குருக்கள்**

மாடமாளிகைகளும், கோபுரங்களும் அழகிய வனப்புமிக்க சோலைகளும், சலசலக்கும் நீரோடைகளும், உயர்ந்த தருமநெறி கமழும் நல்மக்கள் வாழுகின்ற நாடாக அஸ்தினாபுரம் அமைந்துள்ளது. அந்த அழகிய நாட்டை திருதராட்ஷண மகாராஜா ஆண்டு வந்தான். அம்மன்னன் பிறவியிலே குருடனாக இருந்தபோதும் அவனுக்கு அந்நாட்டை ஆள முடிசூட்டப்பட்டது. காந்தார தேசத்து இளவரசிதான் காந்தாரி என்பவர். காந்தாரி என்னும் இளவரசியைதான் மன்னன் மணந்து கொண்டான். இவர்கள் இருவருக்கும் நூற்றியொரு புத்திரர்கள் பிறந்தார்கள். மூத்த மகனின் பெயர் துரியோதனன். மன்னன் தன் பிள்ளைகளின் மேல் அளவற்ற நம்பிக்கையும் பாசமும் வைத்திருந்தான். அவர்களோ இராட்சியத்தின் மேல் கொண்ட ஆசையினால் மனம்போன போக்கெல்லாம் இன்ப நுகர்ச்சியில் வாழ்ந்து தர்மத்தை மறந்து செயற்பட்டதை உணர்ந்தும் திருதராட்ஷண மன்னன் பிள்ளைகளின் மேல் கொண்ட அன்பினால் பாராமுகமாக இருந்தான். வயது முதிர்ச்சியடைந்த நிலையிலும் மன்னனால் மனநிம்மதியற்று துன்பத்தில் ஊசலாடியது இதன் காரணத்தை அவனால் உணரமுடியவில்லை.


மன்னன் ஒருமுறை கிருஸ்ணனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது கிருஸ்ணா நான் மன அமைதியற்று வாழுகின்றேன். அனைத்துச் செல்வங்கள் இருந்தபோதும் என் உள்ளம் துன்பத்திலும் அச்சத்திலும் அலைமோதுகின்றது. காரணம் புரியவில்லை, அனைத்தும் உணர்ந்தவன் நீயே. இதன் காரணத்தைக் கூறமாட்டாயா? என்று இரந்து கேட்டான். அதற்குக் கிருஸ்ணன் மன்னா முன்னொரு காலத்தில் தர்மம், சத்தியம், ஜீவகாருண்யம் தெய்வநம்பிக்கை கொண்ட மன்னன் ஒருவன் இருந்தான். அம்மன்னன் ஜீவகாருண்யத்தில் பிற உயிரைக்கொண்டு மாமிசத்தைப் புசித்தல் கூடாது என்று திட நம்பிக்கை கொண்டு, சைவஉணவாக உண்டு வந்தான். அவரது சமையல்காரன் சிறந்தமுறையில் உணவுப் பதார்த்தங்களைத் தினமும் விதம் விதமாக ருசியாக தயாரித்து பரிமாறி வந்தான். அவனைப் போல் சமையல் கலையில் கைதேர்ந்தவர்கள் யாருமில்லை. அவன் ஒருமுறை நினைத்தான். மன்னனுக்குத் தெரியாது மாமிசத்தைச் சமைத்து ருசியாகக் கொடுக்க எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனையில் வளர்த்து வந்த புறாக் குஞ்சுகளை அறுத்து சைவ உணவு களைப் போல் ருசிபட பக்குவம் செய்து உணவு படைத்தான். அவ்வுணவின் ருசியை உணர்ந்த மன்னன் சமையல்காரனை மெச்சித் தினமும் இதே போன்ற உணவையே சமைத்துத் தரும்படி உத்தரவிட்டான். பின்பு அவனுடைய உணவு நாளடைவில் உயிர்களை வதைத்தே அசைவ உணவாக மாறிவிட்டது. இதை ஏன் கூறினேன் என்றால் முற்பிறவியிலே அம்மன்னனாக இருந்தது நீதான். இப்பிறவியிலே திருதராட்ஷண மன்னனாகப் பிறந்துள்ளாய். உன் நிம்மதியற்ற நிலைமைக்குக் காரணம் எல்லாம் இருந்தும் உன் பூர்வஜன்ம வாசனை உள்ளத்தின் அமைதியின்மைக்கு உன் சிறுசிறு பாவச் செயல்களே காரணம்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று கிருஸ்ணன் பதிலளித்தான்"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டில் குடும்பங்களின் பங்களிப்பு

பேராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

**தாயின் கண்காணிப்பில் கற்றல்**

பிள்ளைகள் விடலைப் பருவத்தை அடையும்வரை தாயின் நிழலில் மகிழ்ச்சியுறுபவர்கள், அதில் வளருபவர்கள். அவர்கள் அதிகம் நேசிக்கும் நபராகவும் நம்புகின்ற நபராகவும் வாழ்பவர்கள் அன்னையர்தான். இது உயிரியல் முறைசார்ந்த உறவுதான். எனினும் எமது சமூக வாழ்வு அதனைப் பல மடங்கு வலிமைப்படுத்தியுள்ளது.

எமது பண்பாட்டின் வலிமையும் பாதுகாப்பும் இதுதான். இதுதான் எமது சிறார்களின் கற்றலில் தாய் என்பவர் அன்புரிமைமிக்க மேற்பார்வை யாளராக, கண்காணிப்பாளராக, வழிகாட்டியாகச் செயற்படுவதற்கு வழிவகுத்தது.

மிகவும் வறிய எழுத்தறிவற்ற தாய்மார் நீங்கலாக ஏனையவர்கள் மாலைவேளைகளில் பிள்ளைகளின் கற்றலை ஒழுங்குபடுத்திவந்தனர். இது நாளாந்த குடும்ப மாலை நிகழ்ச்சி நிரலாக இருந்துவந்தது. இதில் தாய்மார் பின்வரும் மாதிரிகளில் பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர்.

01. பிள்ளைகள் பள்ளியில் பயன்படுத்தும் பயிற்சிப் புத்தகங்களை பார்வையிடல்.
02. பிள்ளைகளை கடவுள் வழிபாட்டின் பின் பள்ளியில் படித்த பாடங் களைப் பயிலுமாறு பணித்தல், மேற்பார்வை செய்தல், தம்மாலி யன்றளவு உதவுதல்.
03. பிள்ளையின் பள்ளிக்கூட வாழ்வு பற்றி உசாவுதல் - அதாவது பிள்ளையின் நண்பர்கள், ஆசிரியர்கள், பள்ளிக்கூட நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றைப் பற்றிக் கேட்டறிதலும், அபிப்பிராயம் உருவாக்கலும், வழிகாட்டலும்.
04. பரீட்சைக் கால அடைவுப்புள்ளிகள் பற்றி கலந்துரையாடல், விசாரித்தல், வலியுறுத்தல், முதன்மையை உணரச் செய்தல், மீள்ஊக்கங்களை வழங்குதல்.

இந்த மேற்பார்வை வகிபங்குதான் மாலைவேளையில் பிள்ளைகள் கற்றலை குடும்ப பண்பாடாக மாற்றியிருந்தது. பிள்ளைகள் நிறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றார்கள், கருத்துப் பரிமாற்றம் செய்தார்கள், தாயின் ஈடுபாடுபற்றி வகுப்பில் சகபாடிகளுடனும் ஆசிரியர்களுடனும் தேவைக்கேற்ப உரையாடி மகிழ்ந்தனர்.

தற்போது இந்த மாலைவேளை குடும்ப மட்ட கற்றல் மேற்பார்வை முறை கைவிடப்பட்டுவிட்டது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாக உள்ளன.

01. பெரும்பாலான பெற்றோர் தொழிலின் நிமித்தம் வீட்டுக்கு வெளியே செல்லுதல், அதிகதூரம் பயணம் செய்தல், வேலைக் களைப்புடன் வீடு திரும்புதல், இரவுநேர வீட்டுவேலைகளில் பரபரப்புடன் ஈடுபடுதல்.
02. பிள்ளைகள் பாடசாலைவிட்டபின் ரியூசன் வகுப்புக்குச் சென்று - அதிக மாணவருடன் அமர்ந்து பாடம்கேட்டல் (கிரகிக்கின்றனரா என்பது உறுதிபடுத்தப்படவில்லை) அதனால் அதிக உடற்களைப் புடன் வீடு திரும்புதல், ஓய்வுத் தேவை உணர்வுடன் வீட்டிற்கு வருதல்.
03. நடுத்தர வருமானம் உள்ள குடும்பங்களின் மாலைவேளை பொழுது போக்கு எஜமானாக தொலைக்காட்சி தொடர் நாடகங்களும், பிற கலைநிகழ்ச்சிகளும் அமைந்திருத்தல், இதில் 50% நேரம் விளம்பர மோகினியின் மின்னியல் அட்டகாசத்தின் ஆதிக்கத்தில் குடும்ப அங்கத்தவர் அனைவரும் கட்டுப்படுதல், இது இரவு 11.00 மணிவரை நீண்டு செல்லுதல், குடும்பத்தில் எல்லா வயதினர்மீதும் இந்த செலவு மிக்க மின்னியல் பொழுதுபோக்கு அரக்கனின் ஆதிக்கம் மேலாண் மையுடனிருத்தல்.
04. தாயும் களைத்து, பிள்ளைகளும் களைத்து வீடு திரும்பும் நகர்மய குடும்பவாழ்வு பொறிமுறையில் தாய் - பிள்ளைகள் மட்டத்திலான உணர்வுப் பரிமாற்றம், தகவல் பரிமாற்றம், கற்றல் மதிப்பீடு, கற்றல் உறக்கம் என்பன அடிபட்டுப்போய்விட்டன.

இத்தகைய குடும்ப நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட புரழ்வு - பாதகமான திசை நோக்கிய குடும்ப செயலாற்ற அசைவானது பிள்ளைகளின் சுயகற்றலை பெரிதும் பாதித்துவிட்டது. பிள்ளையின் படிப்புப் பற்றிய பெற்றோர் இடைவினையுறவை மிகமோசமாக சிதைத்துவிட்டது.

இத்தகைய குடும்ப செயல்முறைகளில் ஏற்பட்டுள்ள கிடையான அசைவியக்கமானது பிள்ளைகளில் கற்றல் தொடர்பான குடும்ப ஈடுபாட்டை வெட்டிப் பிரித்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகா வகுப்புகள்



கீழ்ப் பிரிவு



மேற் பிரிவு

## மிருதங்க வகுப்புகள்



## வயலின் வகுப்புகள்



## சித்திர வகுப்புகள்



## சிலை செய்யும் வகுப்புகள்



## கோலம் போடும் வகுப்புகள்



## மாலைகட்டும் வகுப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய வகுப்பு மாணவர்கள்






அறநெறிப் பாடசாலை
தொழில்நுட்ப மாணவர்கள்




அறநெறிப் பாடசாலை
ஆசிரியர்கள் குழு



யாழ்விஷனின் நூல் நிலையம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மாரின் பங்களிப்பும், பணிநிலையும் மாறிப்போனதால் அவர்களின் குடும்பப் பிள்ளைகள் உதவியற்ற அநாதைகளாகிப் போனார்கள்.

அனுபவச் சுரங்கங்களான மூத்தோரை இழந்துவிட்டு தொழில் நுட்பக் கருவிகளினாலும் பணப்பசியுடன் அலையும் வணிகமயப்பட்ட கல்வி நிறுவனங்களினாலும் பள்ளிப்பிள்ளைகள் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டார்கள்.

பொருள்தேடல் முனைப்பும், போட்டி நிலை அந்தஸ்துணர்வும் குடும்பத்தவர்களை பணம்தேடும் இயந்திரங்களாக்கிவிட்டன. அவர்கள் தம் பிள்ளைகளை அடைப்பதற்காக சரணாலயங்களாக புதிய பள்ளிகளைத் தேடியலைகின்றனர்.

குடும்பங்களின் கட்டமைப்பும் இலக்கும் குலைந்ததால் பிள்ளைகள் கற்றல் ஊக்கங்களை வெளியுலகில் பணம் கொடுத்து தேடிக்கொண்டிருக்கின்றார்கள். உணர்வுகளும் விழுமியங்களுமற்ற சடங்குமுறைக் கல்வி வழங்கும் நிறுவனங்களில் பொறிமுறையில் செயற்படும் ஆசிரியர்களைத்தேடி அலைகின்றார்கள். இதுவே இன்றைய பிள்ளைகளின் கற்றல் வாழ்க்கையாகும்.

குடும்பங்களிலிருந்து கல்வித் தேவைக்காக குடும்பங்களைவிட்டு அதிக தொலைவிற்கு பிள்ளைகள் போய்விட்டார்கள். அவர்களை திரும்பவும் அழைக்கமுடியுமா? குடும்பங்கள் உண்மையானவர்களை உருவாக்குமா? சமூகம் தான் விடைகாணவேண்டும்.


*With Best Compliments*
FROM

**Longtek Electronics Europe Ltd**

12 Bishops Close,
Enfield
EN1 3QJ

**Phone: 020 8805 2420**
**Phone: 020 8805 0002**

With Best Compliments
From

**MR & MRS SKANDAKUMAR**
115,Tonbridge Road
Wateringbury
Kent ME18 5NS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிலைத்த ஆலயமே
# நீடூழி வாழிய நீ!

இ. கஜானன்
கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை.
தரம் - 06

கிருஸ்ணா அறநெறியின் கில்லாடிக் குழந்தைகள் நாம்
வருஷ மொன்று பூர்த்தி கண்டு வாயார வாழ்த்துகின்றோம்.
பற்பல கலைகள் கற்று நற்பணிவுடன் அறிவு பெற்று
புதிய நல் உலகினிலே புனிதராய்த் திகழ்ந்திடுவோம்.

சாதி சமயமென்ற பாகுபாடில்லை யிங்கே
ஏழை பணம் என்ற பேச்சு எள்ளளவும் இல்லையிங்கே
சமத்துவம் கண்டு நல்ல சந்ததி விடிவு காண
உழைத்திடும் கிருஸ்ணாவே என்றென்றும் வாழிய நீ.

---

# எனக்குப் பிடித்த விடயங்களில்....

இ. தசிகா
கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை.
தரம் - 04

எனது அம்மாவை, அப்பாவை எவ்வளவு பிடிக்குமோ. அவ்வளவு பிடிக்கும் இக்கிருஸ்ணா அறநெறிப்பாடசாலையை. படிப்பதற்கு மட்டுமன்றி; பண்போடு வாழ்வதற்கும், எமது திறமைகளை மெருகூட்டவும், சந்தோஷத்தைப் பெருக்கவும் இந்தப் பாடசாலை எமக்கு வழங்கும் சேவைகள் ஏராளம்.

நல்ல நோக்கோடு செயற்படும் இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் இதனை உருவாக்கிய லண்டன் அன்ரி அங்கிளையும், நூலகப் பொறுப்பாளர் ஜசிந்தா அக்காவையும், இங்குள்ள கிருஷ்ணர், சரஸ்வதி, விநாயகர் சிலைகளையும் என்றென்றும் மறக்கமுடியாது.

நானும் ஒருநாள் பெரியவளாகி எனது பெற்றோரினது விருப்பம் போன்று, அவர்களின் சேவைபோன்று, இவ்வுன்னத பணியை ஆற்ற மிகவும் ஆவலாயுள்ளேன். அதற்கு ஆண்டவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறருடன் அன்பாகப் பழகுவோம்

ச. மேரிஜஸ்மின்
கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை,
மாணவி.
தரம் - 06

ஒரு கிராமத்தில் பணக்காரக் குடும்பமும் ஏழைக் குடும்பமும் வசித்து வந்தனர். பணக்காரக் குடும்பத்திலுள்ள மகளுக்கு நாங்கள்தான் இக்கிராமத்தில் பணக்காரர் என்று நினைத்தாள். அவளின் பெயர் வாணி ஆகும்.

ஏழைக் குடும்பத்தில் சாந்தி எனும் பெயருடைய சிறுமி இருந்தாள். இவர்கள் இருவரும் நாவலர் வித்தியாலயம் என்ற பாடசாலையில் கல்வி கற்றனர். வாணி ஒரு அகங்காரம் பிடித்த சிறுமி. ஆனால் சாந்தி ஒரு மென்மையான சிறுமி.

வாணி எப்போதும் சாந்தியோடு வெறுப்புக் கொண்டிருந்தாள். ஏனெனில் சாந்தி ஏழைக் குடும்பத்தில் பிறந்தாள். நான் பணக்காரக் குடும்பத்தில பிறந்தேன் என்று அகங்காரம் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் தீபா எனும் சிறுமியின் பிறந்தநாள். அவள் எல்லோருக்கும் ஒவ்வொரு டொபி கொடுத்துவிட்டு தனது நண்பியான சாந்திக்கு இரண்டு மூன்று டொபி கொடுத்தாள்.

இதைப் பார்த்த வாணி தீபாவின் ரொபியைப் பறித்துவிட்டதாக எல்லா மாணவர்களிடம் குறை கூறினாள். இதைக்கேட்ட சாந்தி கண்ணீர் வடித்துக்கொண்டே தீபாவின் டொபியைத் திருப்பி அவளிடம் கொடுத்தாள். பின் வீடு சென்று பெற்றோரிடம் கூறினாள்.

அதனைக்கேட்ட பெற்றோர் நீ கவலைப்படாதே என்று கூறினார் கள். பாடசாலையில் காலாண்டுப் பரீட்சை ஆரம்பமானது. சாந்தி தனது வீட்டில் இருந்து படித்தாள். ஆனால் வாணி பரீட்சை என்பதை மறந்துவிட்டு விளையாடிக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுப் பரீட்சை ஆரம்பமானது. சாந்தி பயப்படாமல் பரீட்சை எழுதினாள்.

வாணி என்ன எழுதுவதென்றே தெரியாமல் திகைத்தாள். காலாண்டுப் பரீட்சைப் புள்ளிகள் வந்தது. சாந்தி கூடிய புள்ளி எடுத்து முதலாம் பிள்ளையாக வந்தாள்.

வாணி எல்லாப் பாடங்களிலும் குறைவான புள்ளிகளை எடுத்து கடைசிப் பிள்ளையாக வந்தாள். ஆசிரியர் சாந்தியை வகுப்புத் தலைவராக நியமித்தார். இதை அறிந்த வாணி அகங்காரங் கொண்டு கரும்பலகை அழிப்பானைக் கிழித்தாள். தூரத்தில் ஆசிரியர் வருவதைக் கண்ட வாணி ஓடி தனது இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து அழிப்பானின் நிலைமையைப் பார்த்து யார் இந்த அழிப்பானைக் கிழித்தது என்று கேட்டார். அதற்கு சாந்தி தெரியாமல் கிழித்துவிட்டேன் மன்னியுங்கள் என்று கூறினாள். ஆசிரியர் மன்னித்துவிட்டு பணம் கொண்டு வரவும் என்று கூறினார். அவள் ஓடி தனது அம்மாவிடம் கூறி அழுதாள். அம்மா தனது மோதிரத் தைக் கழற்றிவிற்று வந்த பணத்தை சாந்தியிடம் ஆசிரியரிடம் கொடுக்கு மாறு கொடுத்தாள்.

பின் வாணி ஓடி சாந்தியின் கையைப்பிடித்து மன்னிப்புக் கேட்டாள். அவள் தந்தையிடம் சொல்லி சாந்திக்கும் மாளிகை வீடு கட்டிக்கொடுத்தாள். சாந்தியும் வாணியும் ஒருவரையொருவர் விட்டுக் கொடுத்து நண்பிகளாக இருந்தனர்.

மாணவர்களாகிய நாங்களும் சாந்தியைப்போல மற்றவர்களிடம் அன்பாகப் பழகுவோம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சித்திரம்

செல்வன் பரமானந்தம் பிரகாஷ்
கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை மாணவன்,
தரம் - 07

உலகில் பல்வேறு வகையான மொழிகள் உள்ளது. அவற்றுள் யாவராலும் அறிய, உணர, பகிர, பேச உகந்த ஒரு பொதுமொழி சித்திரமொழியாகும். ஆரம்பத்தில் மனிதன் பாவித்த எழுத்துமொழி சித்திரமாகும். அவை இப்போது கலைமொழியாகி உள்ளது.

சிறுவர் சித்திரம் எனும்போது கிறுக்கல், குறியீடுகள் போன்றவை தான் காணப்படும். இது அவர்களின் மனவெழுச்சிகளைப் பகிருகின்ற மொழியாகும். தமக்குத் தாமே தயாராக்கிக் கொள்ளும் ஒரு உரையாடல் சித்திரமாகும். இந்தச் சித்திரம் சிறுவர்களின் குறியீடாக அதிகம் காட்சியாகின்றது.

1. 

மனிதன்

2. 


பூனை

கிறுக்கல் சித்திரம் எனும்போது சுயாதீனமாக வரைந்துகொள்ளும் தன்மை பொருந்தியது. சிறுவர்களின் மனஆசைகளையும், வேதனை களையும், சிந்தனைகளையும், போராட்டத்தினையும், விடுதலையையும் அவற்றில் அதிகம் பயன்படுத்தும் முறையில் இவை அமைந்துள்ளது. **"மனக்கிடக்கைகளை"** அதிகம் கொட்டிவிடும் சித்திரம் கிறுக்கல் சித்திரம். இவற்றைத் தேடல் செய்யும்போது பல்வேறு உருக்களையும், கதை களையும் காணுவர். இவை ஒருவகையில் உருச்சிதைவுச் சித்திரம் என்று பலராலும் அழைத்து வரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம்:



எனவே சிறுவர் சித்திரம் என்று கூறும்போது குறியீடு, கிறுக்கல், பதித்தல், ஒட்டுதல் போன்ற சித்திரம் பொருத்தப்பாடாக உள்ளது. இவை சிறுவர்களுக்கு அதிகம் பொருந்தும். இதனால் மனமகிழ்வு இவர்களுக்கு அதிகம் உண்டாகும். மனச்சுமைகள் குறையும் உலகில் அனைத்துக் குழந்தைகளுக்கும் இவற்றில் இருந்துதான் தமது வினாக் களும், விடைகளும் கொடுக்கின்றது குறிப்பிடத்தக்கது. அசைவு பதிவாகி, பதிவு தேடலாகி, தேடல் படைப்பாகி, படைப்பு வாழ்வதாலே இவற்றில் அடங்குகின்றது. எனவேதான் அனைத்து மனிதர்களும் ஆரம்பத்தில் குழந்தைகள், பின்பு மனிதர்கள் ஆனபடியால் தான் ஒழுக்கம், பரிவு, பொறுமை, அமைதி இதைக்கொண்டு வாழ்கின்றனர்.

சிறுவர் சித்திரம் சிறுவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் பயன்படும் என்பது பொதுவான கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு இறுதிப்போட்டியில் பரிசில்கள் பெறும் மாணவர்கள்

### சமயம்

**தரம் - 3**
பி.தனாமிகா - 1 ஆம் இடம்
கு.ரூபிகா - 2 ஆம் இடம்
சி.பிரியந்தன் - 3 ஆம் இடம்

**தரம் - 4,5**
இ.தசிகா - 1 ஆம் இடம்
ஆ.தனுசாயினி - 2 ஆம் இடம்
ச.யதுர்ஷன் - 2 ஆம் இடம்
சி.யதுஷா - 3 ஆம் இடம்
கு.தசாயன் - 3 ஆம் இடம்

**தரம் - 6,7,8**
இ.கஜானன் - 1 ஆம் இடம்
ப.பிரகாஷ் - 2 ஆம் இடம்
இ.துஷிவர்த்தனன் - 3 ஆம் இடம்

**தரம் - 10,11**
ம.சிந்துஜா - 1 ஆம் இடம்
ச.நிதுசா - 2 ஆம் இடம்
தெ.ஜனனி - 3 ஆம் இடம்

### பண்ணிசை

**தரம் - 2**
ச.மேரி ஜசிந்தா - 1 ஆம் இடம்
ஜெ.இலக்கியா -2 ஆம் இடம்

**தரம் - 3**
பி.தனாமிகா - 1 ஆம் இடம்
ர.கௌசல்யன் - 2 ஆம் இடம்
கு.ரூபிகா - 3 ஆம் இடம்

**தரம் - 4**
இ.தசிகா - 1 ஆம் இடம்
ஆ.தனுசாயினி - 2 ஆம் இடம்
த.ஜென்சிகா - 3 ஆம் இடம்

**தரம் - 5**
ச.மேரி ஜனா - 1 ஆம் இடம்

**தரம் - 6**
இ.கஜானன் - 1 ஆம் இடம்
ச.மேரி ஜஸ்மின் - 2 ஆம் இடம்
சி.விசாளினி - 3 ஆம் இடம்

**தரம் - 7**
நா.மைவிழி - 1 ஆம் இடம்
ப.பிரகாஷ் - 2 ஆம் இடம்
இ.துஷிவர்த்தனன் - 3 ஆம் இடம்

**தரம் - 8**
ர.ஜனனி - 1 ஆம் இடம்
அ.பிரியங்கா - 2 ஆம் இடம்

**தரம் - 9**
த.சோபனா - 1 ஆம் இடம்
ச.நிதுஷா - 2 ஆம் இடம்
தெ.ஜனனி - 2 ஆம் இடம்
ம.சர்வீகா - 3 ஆம் இடம்

**தரம் 10**
ப.டிசாந்தன் - 1 ஆம் இடம்
த.டர்சிதா - 2 ஆம் இடம்
சி.நிசாளினி - 3 ஆம் இடம்

### யோகாசனம்

**மேற் பிரிவு**
தெ.ஜனனி - 1 ஆம் இடம்
சி.காவேரி - 2 ஆம் இடம்
ம.சிந்துஜா - 3 ஆம் இடம்

**கீழ்ப் பிரிவு**
ச.லாவண்ஜா - 1 ஆம் இடம்
ம.மதுசாகினி - 1 ஆம் இடம்
ர.கௌசல்யன் - 2 ஆம் இடம்
த.ஜென்சிகா - 2 ஆம் இடம்
இ.தசிகா - 3 ஆம் இடம்

### சித்திரப் போட்டி

மாலை கட்டுதல்
**மேற் பிரிவு**
தெ.ஜனனி - 1 ஆம் இடம்
இ.விதுர்ஷன் - 2 ஆம் இடம்
ம.சிந்துஜா - 3 ஆம் இடம்

**மத்திய பிரிவு**
ர.ஜெனனி - 1 ஆம் இடம்
ப.பிரகாஷ் - 2 ஆம் இடம்
ம.ராஜேந்தினி - 3 ஆம் இடம்

**கீழ்ப் பிரிவு**
இ.தசிகா - 1 ஆம் இடம்
ம.மதுசாகினி - 1 ஆம் இடம்
அ.சங்கவி - 2 ஆம் இடம்
ர.கௌசல்யன் - 2 ஆம் இடம்
ஆ.தனுசாயினி - 3 ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலம் போடுதல்

### மேற் பிரிவு
த.டர்சிதா - 1 ஆம் இடம்
த.புவிதாஸ் - 2 ஆம் இடம்
சு.ரிசாத்மன் - 3 ஆம் இடம்

### மத்திய பிரிவு
ப.பிரகாஷ் - 1 ஆம் இடம்
அ.டனுஜன் - 2 ஆம் இடம்
சி.சலோமி - 3 ஆம் இடம்
சி.விசாளினி - 3 ஆம் இடம்

### கீழ்ப் பிரிவு
இ.தசிகா - 1 ஆம் இடம்
ஆ.தனுசாயினி - 2 ஆம் இடம்
த.ஜென்சிகா - 3 ஆம் இடம்

## தோரணம் கட்டுதல்

### மேற் பிரிவு
த.புவிதாஸ் - 1 ஆம் இடம்
ப. டிசாந்தன் - 2 ஆம் இடம்
ப.பிருதுபி - 3 ஆம் இடம்

### மத்திய பிரிவு
ப.பிரகாஷ் - 1 ஆம் இடம்
இ. துஷிவர்த்தனன் - 2 ஆம் இடம்
இ.கஜானன் - 3 ஆம் இடம்

### கீழ்ப் பிரிவு
இ.தசிகா - 1 ஆம் இடம்
அ.சங்கவி - 2 ஆம் இடம்
கு.தசாயன் - 3 ஆம் இடம்

## ஓவியம் வரைதல்

### மேற் பிரிவு
ம.பவதாரணி - 1 ஆம் இடம்
ப.டிசாந்தன் - 2 ஆம் இடம்
த.புவிதாஸ் - 3 ஆம் இடம்

### மத்திய பிரிவு
ப.பிரகாஷ் - 1 ஆம் இடம்
இ.கஜானன் - 2 ஆம் இடம்
ம.ராஜேந்தினி - 3 ஆம் இடம்

### கீழ்ப் பிரிவு
இ.தசிகா - 1 ஆம் இடம்
சி.மிதுன் - 2 ஆம் இடம்
ஆ.தனுசாயினி - 3 ஆம் இடம்

## சிற்பம் செய்தல்

### மேற் பிரிவு
க.விதுஷன் - 1 ஆம் இடம்
ப.டிசாந்தன் - 2 ஆம் இடம்
தெ.ஜனனி - 3 ஆம் இடம்

### மத்திய பிரிவு
ப.பிரகாஷ் - 1 ஆம் இடம்
இ.கஜானன் - 2 ஆம் இடம்
சி.சர்மிளன் - 3 ஆம் இடம்

### கீழ்ப் பிரிவு
இ.தசிகா - 1 ஆம் இடம்
தெ.தரணிஜன் - 2 ஆம் இடம்
ச.யதுர்ஷன் - 3 ஆம் இடம்

## நடனம்

ச.மேரி ஜஸ்மின் - 1 ஆம் இடம்
பி.தனாமிகா - 2ஆம் இடம்
ஆ.தனுசாயினி - 3 ஆம் இடம்

## வயலின்

### மேற் பிரிவு
ம.சிந்துஜா - 1 ஆம் இடம்
த.சோபனா - 2 ஆம் இடம்
மு.ஜனனி - 3 ஆம் இடம்

### கீழ்ப் பிரிவு
இ.தசிகா - 1 ஆம் இடம்
த.ஜென்சிகா - 2 ஆம் இடம்
பி.தனாமிகா - 3 ஆம் இடம்

## மிருதங்கம்

ர.ஜெனார்த்தனன் - 1 ஆம் இடம்
ப.கபிலன் - 2 ஆம் இடம்
இ.கஜானன் - 3 ஆம் இடம்
ப.பிருதுபி - 3 ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இதயங் கனிந்த நன்றிகள்

எமது யாழ் விஷனின் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை தனது முதலாவது ஆண்டை மிகச் சிறப்பாக முதல்படி எடுத்து வைத்துள்ளது. இந்த முயற்சியில் பங்குபற்றியோர் பலர். அவர்களுக்கு எமது பாடசாலை யின் சார்பில் தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அனந்தலெட்சுமி அம்மா, எமக்கு பல விதங்களிலும் எமது பாடசாலை தொடங்கி இயங்குவதற்கு பெரிதும் உதவியாகவும் பக்கபலமாகவும் இருந்து வந்தார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச் சாரியர் அவர்கள் எமது பாடசாலை திறப்புவிழாவிலிருந்து, ஒவ்வொரு விசேஷ பண்டிகைகளுக்கும் நேரில்வந்து எம்மையும், எமது குழந்தை களையும் ஆசீர்வதித்து எம்மை மேலும் பணிசெய்ய ஊக்குவித்தமைக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

ஸ்ரீ பாலகதிர்காம பிரதான குருக்கள் சிவஸ்ரீ கு. குமாரக்குருக்கள் எமக்கு முழுதுணையாக நின்று எமக்கு ஆலோசனைகள் கூறி எம்மை வழிநடத்தி வருவதற்கு நன்றிகள்.

எமக்கு நல்லாசிகளும் வாழ்த்துச் செய்திகளும் என்றென்றும் தந்து கொண்டிருக்கும் எமது பாடசாலைச் சுற்றாடலிலுள்ள எல்லா ஆலயங்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலைப் பிள்ளைகளுக்கு அவர்களின் தேவைகளுக் கேற்ப உதவிகளைச் செய்துதரும் லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோயில், லூசியம் சிவன் கோயில், என்பில்ட் நாகபூஷணி அம்மன் கோயில் நிர்வாகத்திற்கும், எமது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

எமது மலருக்கான விளம்பரங்களைத் தந்துதவிய ஸ்தாபகர் களுக்கும், இம்மலரினை அச்சிட்டுத்தந்த அன்றா நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



**கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை**
**நிர்வாகிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With
Best Compliments
from

SISIL WORLD
The World at your doorstep

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes*

*from*

Yarl Petroleum Limited

Yarl Management Limited

65 Bishop Rise, Hatfield, Herts AL10 9BY

Mobile : 07860 256 508 Phone : 01707 270 170, 01707 261 006

Email : suci@yarlpetroleum.com Web : www.yarlpetroleum.com

ANDRA Printers, Jaffna - 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org